பக்கங்கள்: 10

# காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 14 சனிக்கிழமை 27.03.2021 கதிர் 10

## யாழ் தொற்று இன்று 85 பேர்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணத்தில் இன்று இடம்பெற்ற பி.சி.ஆர். சோதனையில் மேலும் 85 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். இவர்கள் திருநெல்வேலியையும் அதைச் சூழ்ந்த பகுதிகளையும் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# ஐ.நா. தீர்மானம் ஏமாற்றம் தந்தாலும் அது தமிழருக்கு சர்வதேச அரங்கில் பக்க பலம்!

### முன்னாள் எம்.பி. மாவை சேனாதிராஜா தெரிவிப்பு



ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானம் ஏமாற்றத்தைத் தந்தாலும் அது சர்வதேசத்தின் பார்வையில் எமக்குப் பயன்படக்கூடியதாகவே இருக்கும். தீர்மானத்தை நிறைவேற்றிய நாடுகளும் நடுநிலைமை வகித்த நாடுகளும் அதிலுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த தமது பங்களிப்பை வழங்குவார்கள் என்று நாம் நம்புகின்றோம்.

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சோ.சேனாதிராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் வெளியிட்டிருந்த இலங்கை அரசு தொடர்பான அறிக்கை 2

# யாழில் முடக்கப்பட்ட பகுதிகளில் நாளை பி.சி.ஆர். பரிசோதனை!

## வர்த்தகர்களுக்கு யாழ். வணிகர் கழகம் அழைப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 27

**கொரோனா வைரஸ் தொற்று தீவிரமடைந்ததால் நேற்று தொடக்கம் யாழ். மாநகரின் முடக்கப்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள், முகாமையாளர்கள், பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் அனைவருக்குமான பி.சி.ஆர். பரிசோதனை நாளை நடைபெறவுள்ளது.**

**காலை 7 மணிக்கு யாழ். நவீன சந்தைக் கட்டடத் தொகுதியின் மூன்று இடங்களில் யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரால் மேற்படி பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.** 2

# மாகாணத் தேர்தலை நடத்தி நாட்டைப் பிளவுபடுத்தாதீர்!

### அரசை இப்படி மிரட்டுகின்றது தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்



நாட்டைப் பிளவுபடுத்துவதற்கு எஞ்சியுள்ள ஒரே வழி மாகாண சபை முறைமையாகும். எனவே, தற்போதைய சூழ்நிலையில் மாகாண சபைகளுக்கான தேர்தலை அரசு நடத்தவேகூடாது.

– இவ்வாறு தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நாட்டைப் பிளவுபடுத்தும் நோக்கிலேயே 2

### ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து

# சஜித்துக்கு எதிராக வியூகம் வகுக்கின்றாரா சம்பிக்க?



2024ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு எதிராக '43'எனும்அரசியல் இயக்கத்தின் தலைவர் சம்பிக்க ரணவக்க வியூகம் வகுக்கின்றாரா? என்று ஊடகம் ஒன்று கேள்வி எழுப்பியுள்ளது.

இது தொடர்பில் குறித்த ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில் மேலும் குறிப்பி 2

## போதைப்பொருள் தகவல்களை வழங்குவோருக்குப் பணப் பரிசு

### பொலிஸார் அறிவிப்பு



போதைப்பொருள் கடத்தல் தொடர்பில் 1997 எனும் இலக்கத்துக்குத் தகவல் தருவோருக்கு பணப் பரிசு வழங்கப்படவுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் றோஹன தெரிவித்தார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- 2

### தமிழர்களுக்கு எதிரான அநீதிகள்:

## சர்வதேசத்துக்குப் பொறுப்புக்கூற கடமைப்பட்டுள்ளது கோட்டா அரசு

### சார்ள்ஸ் எம்.பி. சுட்டிக்காட்டு



ஐ.நா. தீர்மானத்தில் சர்வதேச விசாரணை என்ற வசனம் இல்லை என்றாலும் கூட இலங்கையில் 2009 ஆம் ஆண்டும் அதற்கு முற்பட்ட காலங்களிலும் தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெற்ற அநீதிகளுக்கு சர்வதேசத்திடம் பொறுப்புக்கூறும் கடப்பாடு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசுக்கு உள்ளது.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போர்க்காலத்திலும் அதனைத் தொடர்ந்தும் தமிழ் மக்களுக்கு பல்வேறு 2

## எஞ்சிய இந்திய மீனவர்கள் 14 பேரும் இன்று விடுதலை



(ந.லோகதயாளன்)

இலங்கைக் கடற்பகுதிக்குள் அத்துமீறி நுழைந்தனர் என்ற குற்றச்சாட்டில் கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்ட எஞ்சிய 14 இந்திய மீனவர்களும் இன்று விடுதலை செய்யப்பட்டு தாயகம் திரும்பினர்.

கடந்த புதன்கிழமை காலை புதுச்சேரி மாநிலம் காரைக்காலில் இருந்து மீன்பிடிக்க 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## சஜித்துக்கு எதிராக.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டப்பட்டுள்ளதாவது:–

ஐக்கிய மக்கள் சக்தியின் முதலாவது மாநாடு அக்கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் கடந்த 15 ஆம் திகதி கொழும்பில் கோலாகலமாக நடைபெற்றது. இம்மாநாட்டில் உரையாற்றிய அரசியல் பிரமுகர்கள், தற்போதைய அரசின் செயற்பாடுகளை சரமாரியாக விமர்சித்ததுடன், 2024 இல் ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சி மலரும் எனவும் நம்பிக்கை வெளியிட்டனர்.

'43' எனும் அரசியல் இயக்கத்தை ஆரம்பித்துள்ள சம்பிக்க ரணவக்கவும் மாநாட்டில் பங்கேற்று ராஜபக்ஷக்களை தனக்கே உரிய பாணியில் கடுமையாக விளாசித் தள்ளினார்.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் சங்கமிக்கும் நோக்கிலேயே ஜாதிக ஹெல உறுமயவிலிருந்து சம்பிக்க ரணவக்க தனது சகாக்களுடன் வெளியேறினார். எனினும், அவர் இன்னும் உறுப்புரிமை பெறவில்லை. ராஜித சேனாரத்ன, குமார வெல்கம ஆகியோர் ஐக்கிய மக்கள் சக்தியில் உறுப்புரிமையை பெற்றிருந்தாலும் சம்பிக்க விவகாரமே இன்னும் இழுபறியில் இருக்கின்றது.

முதலாவது மாநாட்டுக்கு முன்னர் இப்பிரச்சினைக்கு முடிவு காணப்படும் என அறிவிப்புகள் வெளியாகியிருந்தாலும், குழப்பநிலை நீடிப்பதை அவதானிக்க முடிகின்றது.

குறிப்பாக சம்பிக்க ரணவக்கவுக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதித் தலைவர் பதவியை வழங்குவதற்கு அக்கட்சியின் உறுப்பினர்கள் சிலர் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். மறுபுறத்தில் அதிகாரமற்ற பதவியை ஏற்பதற்கு சம்பிக்கவும் தயாரில்லை. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே அவர் '43' எனும் இயக்கத்தை ஆரம்பித்துள்ளார்.

மாநாட்டுக்கு முன்னர் சம்பிக்க ரணவக்க, ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களுடன் பேச்சு நடத்தியுள்ளார். இதன்போது '43' எனும் அரசியல் இயக்கத்தை ஐக்கிய மக்கள் சக்தியின் ஒரு கிளையாகக் கொண்டு நடத்துமாறு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. எனினும், இறுதி முடிவு எட்டப்படவில்லை.

இதற்கிடையில் 2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்தே சம்பிக்க இவ்வாறானதொரு இயக்கத்தை ஆரம்பித்துள்ளார் என்ற விமர்சனமும் முன்வைக்கப்பட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியானது சஜித் பிரேமதாஸவை பெயரிட்டுள்ளது. ஆக சஜித்துக்கு எதிராக சம்பிக்க செயற்படுவாரா என்ற வினாவும் எழுகின்றது.–என்றுள்ளது.

## எஞ்சிய இந்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்த முனியசாமி, வீரன், ஜெயபால், சின்னையா உள்ளிட்ட 14 மீனவர்களையும், ஒரு படகையும் எல்லை தாண்டி மீன்பிடித்தனர் என்ற குற்றச்சாட்டில் இலங்கைக்கடற்படையினர்கைதுசெய்து காரைநகர் கடற்படை முகாமில் தங்க வைத்திருந்தனர்.

குறித்த மீனவர்கள் மீது நேற்றுமுன்தினம் வழக்குப் பதிவு செய்யப்பட்டு அவர்களை எதிர்வரும் 8ஆம் திகதி வரை தனிமைப்படுத்துமாறு ஊர்காவற்துறை நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார்.

இந்நிலையில், இலங்கை ஜனாதிபதி நல்லிணக்க அடிப்படையில் மீனவர்களை விடுதலை செய்யப் பணித்த விடயம் நேற்று மீண்டும் நீதிமன்றத்தின் கவனத்துக்குக்கொண்டுசெல்லப்பட்டது. இதனால் குறித்த விடயத்தை சட்டமா அதிபரின் கவனத்துக்குக் கொண்டு செல்ல நீதிமன்றம் அறிவுறுத்தியது.

இதையடுத்து கைதான மீனவர்களுக்கு நேற்று அவசர அவசரமாக பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தால் குற்றப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது.

இதையடுத்து நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகள் சகிதம் காரைநகர் கடற்படை முகாமுக்குச் சென்ற நீதிபதி மீனவர்களை நேரில் பார்வையிட்டு எச்சரிக்கை செய்து மீனவர்களையும் படகையும் விடுவித்தார்.

படகில் இருந்த 1,040 கிலோ மீனையும் அழிக்கும் படி நீதவான் உத்தரவிட்டார்.

## யாழில் முடக்கப்பட்ட.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவே, அனைவரும் குறித்த நேரத்திற்குத் தங்களது அடையாள அட்டை அல்லது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் தவறாது வருகை தந்து பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு யாழ். வணிகர் கழகம் கேட்டுக்கொண்டுள்ளது.

மேலும், யாழ். மாநகர சந்தைப் பகுயில் உள்ள வியாபாரிகள் இதுவரை பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளாமல் இருப்பின் அவர்களும் இந்தப் பரிசோதனையில் தவறாது கலந்துகொண்டு தங்களுக்கான பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறும் யாழ். வணிகர் கழகம் கேட்டுக்கொண்டுள்ளது.

## ஐ.நா. தீர்மானம்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மிகவும் காத்திரமானதாக இருந்தது. ஆனால், தற்போது நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் எமக்கு ஏமாற்றம் தந்தாலும் அதனை நடைமுறைப்படுத்த வேண்டிய பொறுப்புக்கள் பல ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளருக்கே வழங்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி சர்வதேசத்தின் பார்வையில் நிறைவேற்றப்பட்டுள்ள இந்தத் தீர்மானம் எமக்குப் பயன்படக்கூடியதாகவே இருக்கும். அதுமட்டுமன்றி தீர்மானத்துக்கு ஆதரவாகச் செயற்பட்ட நாடுகளும் நடுநிலைமை வகித்த நாடுகளும் குறிப்பாக இந்தியா, ஜப்பான் போன்ற நாடுகள் தீர்மானத்திலுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த கூடிய பங்களிப்பைச் செய்வார்கள் என்றே நாங்கள் நம்புகின்றோம்.

நவநீதம்பிள்ளை அம்மையார் 2009ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கைக்கு வருகை தரவிருந்தபோது அன்று ஆட்சியில் இருந்த மஹிந்த ராஜபக்ஷ அவரை நாட்டுக்குள் வரவிட மாட்டேன் என்று இறுமாப்புடன் கூறியிருந்தார். பின்னர் அவரை வர அனுமதித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்திப்பதற்கும் தடைகள் ஏற்படுத்தப்பட்ட போதும் அம்மையாரை நாம் சந்தித்தோம் – என்றார்.

## போதைப்பொருள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதைப்பொருள் கடத்தல் தொடர்பான தேடுதல் நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நேற்று 100 இற்கும் அதிகமான சந்தேகநபர்கள்கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கைகளில் பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க முடியும் என்றும் உறுதி செய்யப்பட்ட தகவல்களை 1997 எனும் இலக்கத்துக்கு அறிவிக்க முடியும்.

அத்துடன், நீங்கள் வழங்கும் தகவல்கள் உறுதி செய்யப்பட்டால், இலங்கை பொலிஸ் திணைக்களத்தால் உங்களுக்குப் பெறுமதிமிக்க சன்மானம் வழங்கப்படும் – என்றார்.

## மாகாணத் தேர்தலை.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு இந்தியாவும், மேற்குலகமும் வலியுறுத்தி வருகின்றன. மேற் படி அழுத்தங்களுக்கு அரசு அடிபணியக் கூடாது. மாறாக இந்தியாவையும், மேற்குலகையும் திருப்திப்படுத்துவதற் காக தேர் தல் நடத்தப்படுமானால் பாரிய விளைவுகளைச் சந்திக்க வேண் டிய நிலை அரசுக்கு ஏற்படும்.

தற்போதைய மாகாண சபை முறைமை என்பது நிர்வாக ரீதியில் வெள்ளை யானையாகும். நாட்டைப் பிளவுபடுத்துவதற்கு எஞ்சியுள்ள வழியாகவும் அது அமைந்துள்ளது. எனவே, அத்தகைய முறைமைக்கு அரசு உயிர் கொடுக்க முற்படக்கூடாது.

புதிய அரசமைப்பு ஊடாக அபிவிருத்தி சபைகள் உருவாக்கப்பட்டு, பிரிவினைவாத சிந்தனைகள், கோட்பாடுகளைத் தடை செய்து விட்டு வேண்டுமானால் அந்த அபிவிருத்தி சபைகளுக்கு அரசு தேர்தலை நடத்தலாம். அதற்கு முன்னர் நடத்தவே கூடாது. 13ஆவது திருத்தச் சட்டமும் எமது நாட்டுக்கு அவசியம் இல்லை – என்றார்.

## கிறிஸ்தவ தேவாலயங்களில் படையினர் கண்காணிப்பில்

(ந.லோகதயாளன்)

பெரிய வெள்ளி உற்சவத்தை முன்னிட்டு யாழ். குடாநாட்டில் உள்ள கிறிஸ்தவ தேவா லயங்களின் பாதுகாப்பு தொடர்பில் அதிக கவனம் செலுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி – உயிர்த்த ஞாயிறு தினமன்றுஇடம்பெற்ற குண்டுத் தாக்குதலையடுத்து நாட்டில் இடம்பெறும் கிறிஸ்தவ ஆராதனைகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் எதிர்வரும் 2ஆம் திகதி இடம்பெறும் பெரிய வெள்ளி தொடர்பிலும் அதிக கவனம் செலுத்துமாறு யாழ். படைத்தரப்புக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் அனைத்து கிறிஸ்தவ தேவாலயங்களின் பாதுகாப்பு தொடர்பிலும் கண்காணிப்புப் பணிகள் இடம்பெறுகின்றன.

## சர்வதேசத்துக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அநீதிகள் இழைக்கப்பட்ட நிலையில், இந்த நாட்டில் தமிழ் மக்கள் சுயமாக வாழ வேண்டும் என்பதற்காகவே நாம் சர்வதேச விசாரணைகளைக் கோருகின்றோம்.

இந்தத் தீர்மானத்தில் சர்வதேச விசாரணை என்ற சொல் நீக்கப்பட்ட போதிலும், சர்வதேசத்துக்குப்பொறுப்புக்கூறும் கடப்பாடுஉள்ளதைஅரசுபுரிந்துகொள்ள வேண்டும்.

இலங்கை இன்று சீனாவின் மாநிலமாகவும், பங்களாதேஷத்திடம் கடன் கேட்கின்ற நிலையிலும் உள்ளதை ஆட்சியாளர்கள் புரிந்துகொள்ள வேண்டும். இது நாட்டை சோமாலியா போன்ற நிலைக்குக் கொண்டு செல்லும்.

தமிழ் மக்கள் எதிர்பார்த்த விடயங்கள் ஐ.நா. தீர்மானத்தில் இல்லாவிட்டாலும், இலங்கையில்தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பில் தீர்மானம் கொண்டுவந்த பிரிட்டனுக்கும், அதற்கு ஆதரவு வழங்கிய, நடுநிலை வகித்த நாடுகளுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன் – என்றார்

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம்-
076 443 8622




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவுஸ்திரேலியாவில் உயர்க்கல்வியைத் தொடர அநேகமான மாணவர்களுக்கு ஓர் அரியவாய்ப்பு

Courses available:

Diploma | Bachelor Degree | Master Degree

- Business
- Hospitality
- Information Technology
- Engineering and
- Nursing

கிடைக்கப்படும் நன்மைகள்:

- படித்துக்கொண்டே ஒரு வாரத்தில்20 மணிநேரவேலைக்கான அனுமதி உண்டு
- பட்டபடிப்பை நிறைவுபெற்று 18 மாத வேலை செய்வதற்கான அனுமதி உண்டு

தொடர்புக்கு: HOTLINE: 0766228891

Australian Migration Consultants
41, George R De Silva Mw, Colombo - 13
0112437285
Email: sl.austvisa@gmail.com

இறைச்சிக் கோழி விற்பனை

புறோய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.



U.S.A பாம்

குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

இலங்கையில் கல்வி கற்ற பொறியியலாளர்களுக்கு ஆஸ்திரேலியா விசா!!!

Australian Skilled - Recognised Graduate Visa for Junior Engineers
(Graduated within 2 years)
18 Months to work and gain experience in Australia.

தகைமைகள்:

- வயது எல்லை 31
- பொறியியலாளர் பட்ட படிப்பு
- BSc.Engg from University of Moratuwa, University of Peradeniya, University of Jaffna, University of Ruhuna
- ஆங்கிலம் - IELTSaverage 6

தொடர்புக்கு: HOTLINE: 0766228891
Australian Migration Consultants
41, George R.De SilvalMw,
Colombo 13
0112437285, Email: sl.austvisagmail.com

flash Super Detergent

வைரஸிடம் இருந்து உங்கள் பாதுகாப்பை உறுதி செய்கிறது.

அலுவலகங்கள், பாடசாலைகளுக்கான தொற்றுநீக்கி திரவங்கள், சகல விதமான சுகாதாரப் பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் சுத்திகரிப்பு திரவங்கள் எம்மால் தயாரித்து விநியோகிக்கப்படுகின்றன.

யாழ் நகரின் அசாதாரண நிலைமையை வென்றிடுவோம்!

NEW TECHNOLOGY NEW FORMULA
HI CLEAN
தன்னிகரற்ற உள்ளூர் உற்பத்திகள்




- சமூக இடைவெளி பேணுவோம்.
- முகக் கவசம் அணிவோம்.
- கைகளைக் கழுவுவோம்.
- சரியான தொற்று நீக்கிகளை வாங்கி உபயோகிப்போம்.

எம்மை நாமே பாதுகாத்துக் கொள்வோம்...!

தலைமைக் காரியாலயம்
607A K.K.S. வீதி, யாழ்ப்பாணம்
021 222 2855

சாய் கிளீனிக் பருத்தித்துறை 077 296 9830

OCC மல்டி சென்ரர் மருதனார்மடம் 077 444 0240

IS Distributor சங்கானை 077 5134348

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ஆட்சிக் கட்டமைப்பின் தவறு

நம் மத்தியில் ஒரு பண்பியல்பு உண்டு. வெற்றி என்றால் நாங்களே முன்னின்று தலையை நீட்டி வெற்றி வாகைக்கான பொறுப்பை ஏற்றுக் கொள்வோம். விடயம் தோல்வி கண்டு விட்டால் அதற்கான பொறுப்பைச் சுமத்துவதற்கு பிற தலை ஒன்றைத் தேடுவோம்.

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கைக்குக் கிட்டிய பெரும் பின்னடைவுக்கு – தோல்விக்கு – பொறுப்பை யார் மீதாவது சுமத்தி, யாருடைய தலையையாவது உருட்ட வேண்டிய தேவை கொழும்பு ஆட்சிப் பீடத்துக்கு உண்டு.

பெரும்பாலும் நாட்டின் வெளிவிவகார அமைச்சின் செயலாளரான முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் ஜயநாத் கொலம்பகேயின் தலை இதற்காக உருட்டப்படலாம் என்று பேச்சடிபடுகின்றது.

எனினும் அவர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு மிக நெருக்கமானவர். அவரின் நம்பிக்கைக்குரியவர். அதனால், பொறுப்பை அவர் மீது சுமத்தி, அதனடிப்படையில் வேறு பொறுப்பான பதவிக்கு அவர் மாற்றப்படக் கூடும்.

அரசுத் தரப்பிலும் பஸில் ராஜபக்ஷவுக்கு மிக நெருக்கமான பல மூத்த தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள் ஜெனிவாப் பின்னடைவுக்கு வெளிவிவகாரச் செயலாளரின் செயற்பாடே – தவறான கையாளுகையே – அனுபவமற்ற இராஜதந்திர ஊடாட்டமே – காரணம் என்று பிரசாரம் செய்கின்றனர்.

வெளிவிவகாரச் செயலாளர் மீது குற்றச்சாட்டு விரலை இப்போது நீட்டும் அரசுப் பக்கத் தலைவர்கள் இரண்டு விடயத்தை நோக்க வேண்டும்.

ஒன்று – ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் தற்போது முடிவடைந்த 46 ஆவது அமர்வு தொடங்க முன்னரே, இப்படி நெற்றிமுட்ட மோதும் சர்வதேச இராஜதந்திரக் கையாள்கையை இலங்கை முன்னெடுத்தால் இறுதியில் இப்படித்தான் இக்கட்டில் சிக்கும் என்பது பெரும்பாலும் எல்லோராலும் – இவ் விவகாரத்தில் தொடர்புபட்ட அனைத்துத் தரப்புகளினாலும் – கூறப்பட்டது; ஊகமும் தெரிவிக்கப்பட்டது. ஆகவே இப்போது குற்றச்சாட்டு விரலை வெளிவிவகாரச் செயலாளர் மீது சுமத்துவதில் அர்த்தமில்லை.

அடுத்தது – ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் உட்பட அனைத்து சர்வதேச விவகாரங்களையும் இதே போன்று பௌத்த, சிங்களப் பேரினவாத நெறிமுறைப் போக்கில் தான் அணுகுவது என்பது ஜனாதிபதியிலிருந்து ஆட்சித் தரப்பின் ஒவ்வொரு அங்கத்தினதும் ஒட்டுமொத்த நிலைப்பாடு. அதையே திரும்பத் திரும்ப அவர்கள் ஒற்றைக் காலில் நின்று வலியு றுத்த அதன் வழியேதான் வெளிவிவகாரச் செயலாளர் கொலம் பகே செயற்பட்டார். ஆகவே தவறுக்காக அவரை மட்டும் குற்றம் சுமத்துவதில் அர்த்தம் ஏதுமில்லை.

இந்தத் தீர்மான விடயத்தில் இலங்கையுடன் வழமையாக நட்புறவு பேணும் இந்தியா, ஜப்பான், நேபாளம், இந்தோனேஷியா, பஹ்ரைன் போன்ற நாடுகளின் ஆதரவைக் கூட இலங்கையினால் பெற்றுக் கொள்ள முடியவில்லை. அவை இலங்கையை ஆதரிக்கவுமில்லை; எதிர்க்கவுமில்லை.

ஆனால், சர்வதேச விவகாரங்களில் வழமையான இலங்கையுடன் நெருக்கமாக நிற்கும் இந்த நாடுகளின் ஆதரவைக் கூட இலங்கையினால் திரட்ட முடியவில்லை என்பது இலங்கையின் இராஜதந்திரத்துக்குப் பெரும் தோல்வி என்றும் –

அதனால், இந்த இராஜதந்திர விடயங்களைக் கையாண்ட வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அதற்குப் பொறுப்பேற்க வேண்டும் என்றும் – கூட ஆளும் தரப்பினால் கூறப்படுகின்றது.

அரச சிவில் நிர்வாகம், சர்வதேச இராஜதந்திரம் ஆகியவற்றுடன் கிஞ்சித்தும் தொடர்பே கொண்டிராத – முப்பது, நாற்பது வருடங்கள் படைத்துறைச் சேவையில் தம்மைப் பிணைத்திருந்த – ஒரு மூத்த படை அதிகாரியை சர்வதேச விவகாரங்களைக் கையாள்வதற்கு – சர்வாதிகாரி போல செயற்படுவதற்கு – இடமளித்து விட்டு, இப்போது குறைகூறி, பொறுப்பை அவர் தலையில் கட்டி விட்டுத் தாங்கள் தப்புவது என்பது ஆளும் தரப்பினரின் கோழைத்தன அரசியலன்றி வேறில்லை.

அதுவும், உள்ளூர் அரசியலில் தாங்கள் முன்னெடுக்கும் பௌத்த, சிங்களத் தீவிர வெறிப் போக்குப் பண்பியல்பை, சர்வதேச ஊடாட்டக் கையாள்கையிலும் பின்பற்ற வேண்டும் என்ற கட்டாய நிலைப்பாட்டை வரையறுத்து விட்டு, அதற்குள் நின்று செயற்படும்படி பணிக்கப்பட்ட ஒருவர் இப்படித்தான் காரியமாற்ற முடியும். இதற்கு அப்பால் அவரிடமிருந்து எதிர்பார்த்தால் அது அவரை அப்பதவியில் அமர்த்தியவர்களின் தப்பேயன்றி – தவறேயன்றி – அவர் இழைத்த குற்றமேயல்ல.

அத்தகைய பேரினவாத, வெறித்தன நிலைப்பாட்டை சர்வதேச விவகாரங்களைக் கையாள்வதில் கைக்கொண்டால் முடிவு இப்படித்தான் நாட்டுக்கு எதிராக அமையும் என்பது சர்வதேச அரசியலில் ஆனா, ஆவன்னா என்று அடிப்படை அரிச்சுவடி படிப்பவருக்கும் கூடத் தெரியும்.

அப்படியிருக்க, இப்போது பிழையை வெளிவிவகாரச் செயலாளர் மீது மட்டும் சுமத்துவதில் அர்த்தமில்லை. இது ஜனாதிபதியிலிருந்து சகல அரசுத் தரப்பினதும் கூட்டுத் தவறன்றி வேறில்லை.

# உடலுக்கு ஒவ்வாத தேங்காய் எண்ணெயை சந்தைக்கு விநியோகிப்பதற்கு தடை விதிப்பு!

## வர்த்தக அமைச்சர் பந்துல தெரிவிப்பு



மனித ஆகாரத்துக்கு பொருத்தமில்லாத 13 கொள்கலன்களில் வந்த தேங்காய் எண்ணெய் தொடர்பாக விசாரணை இடம்பெற்று வருகின்றது. அதுவரை அவற்றை நாட்டுக்குள் விநியோகிப்பதை தடைசெய்திருக்கின்றோம் என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

எதிர்வரும் தமிழ், சிங்கள புத்தாண்டை அடிப்படையாகக்கொண்டு, மனித உடலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும், நச்சுத்தன்மை கலந்த தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்யப்படுவதாக செய்தி வெளியிடப்பட்டு வருகின்றது. இதுதொடர்பாக பாரம்பரிய தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்களின் சங்கம் மாத்தளை பிரதேசத்தில் செய்தியாளர் சந்திப்பொன்றை நடத்தியிருந்தது. அதில் புற்றுநோயை ஏற்படுத்தக் கூடிய தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டிருப்பதாகவும் அதனை நாட்டுக்குள் விநியோகிக்க நடவடிக்கை எடுத்துவருவதாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

குறித்த சர்ச்சைக்குரிய கருத்து வெளியிடப்பட்டு மறு நாள் நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை அதிகாரிகளை சந்தித்து, இது தொடர்பாக விசாரணை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டேன். தற்போது விசாரணை இடம்பெற்று வருகின்றது. அத்துடன் இறக்குமதி செய்யப்படும் அனைத்துவகையான ஆகார வகைகளும் தர நிர்ணய நிறுவனம் மற்றும் சுகாதார அமைச்சின் உணவு பாதுகாப்பு பிரிவில் பரிசோதிக்கப்பட்ட பின்னரே அதனை நுகர்வோருக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

அதனடிப்படையில், இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய் தர நிர்ணய நிறுவனம் மற்றும் உணவு பாதுகாப்பு பிரிவுக்கு அனுப்பப்பட்டது. அதில் சுகாதார அமைச்சின் அறிக்கையில், 13 கொள்களன்களில் இறக்குமதி செய்யப்பட்டிருக்கும் தேங்காய் எண்ணெய் மனித ஆகாரத்துக்கு பொருத்தமில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனால் அதனை மீள் ஏற்றுமதி செய்யுமாறு உத்தரவிட்டிருப்பதாக சுங்க திணைக்கள பணிப்பாளர் எமக்கு தெரிவித்திருந்தார்.

அத்துடன் இந்த தேங்காய் எண்ணெய் தொடர்பாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையும் விசாரணை மேற்கொண்டு வருகின்றது. அவர்களது விசாரணை அறிக்கை கிடைக்கும்வரை குறித்த தேங்காய் எண்ணெய் தொகையை தற்போது களஞ்சியப்படுத்தி இருக்கின்றோம். அந்த தேங்காய் எண்ணெய் நுகர்வோர் பெற்றுக்கொள்ளும் வகையில் விநியோகிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுவதில் எந்த உண்மையும் இல்லை என்றார்.

# பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்த புதிய பிரேரணை ஒன்று அவசியம்!

## மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 27

இலங்கையில் கடந்த காலத்தில் இடம்பெற்ற பாரிய மனித உரிமை மீறல்களுக்கான நீதியைப் பெற்றுக்கொடுப்பதில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் புதிய பிரேரணை மிகமுக்கியமானதாக விளங்குகின்றது.

நாடொன்றில் நீதி மறுக்கப்படும் பட்சத்தில், கடந்தகாலக் குற்றங்களுக்கான பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை ஐக்கிய நாடுகள் சபை முன்னெடுக்கும் என்பது இந்தத் தீர்மானத்தின் மூலம் நிரூபணமாகியிருக்கிறது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் கொண்டுவரப்பட்ட 46/1 பிரேரணை கடந்த செவ்வாய்க்கிழமை 11 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து, இதுகுறித்து மனித உரிமைகள் கண்காணிப்பகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

# பாடசாலைப் பாடத்திட்டத்தில் சட்டக் கல்வி: உபகுழுவின் அறிக்கை இரு மாதங்களில்!

பாடசாலை பாடத்திட்டத்தில் சட்டத்தை ஒரு பாடமாக உள்ளடக்குவதற்குப் பொருத்தமான பொறிமுறையொன்றைத் தயாரிக்க நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற உபகுழு அதன் அறிக்கையை இரண்டு மாதங்களில் ஆலோசனைக் குழுவுக்கு வழங்கத் தீர்மானித்துள்ளது.

அதேநேரம், இந்த உப குழுவின் தலைவராக இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவை நியமிப்பதற்குக் குழு உறுப்பினர்கள் ஏகமனதாகத் தீர்மானித்துள்ளனர்.

பாடசாலைப் பாடத்திட்டத்தில் சட்டத்தை ஒரு பாடமாக உள்ளடக்குவதற்குப் பொருத்தமான பொறிமுறையொன்றை தயாரிப்பது தொடர்பாகவும் ஆராயும் நோக்கில் கல்வி அமைச்சு மற்றும் நீதி அமைச்சு ஆகியன இணைந்த அமைச்சரவை ஆலோசனைக் கூட்டத்தில் இந்த உபகுழு நியமிக்கப்பட்டிருந்தது.

இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் அனைத்து உறுப்பினர்களினதும் இணக்கப்பாட்டுடன் குழுச் செயற்பாடுகளை ஊடகங்களுக்கு வழங்க அனுமதிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

இந்த விவகாரம் தொடர்பாக பொது மக்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்கும் அத்தகைய பொதுமக்களின் கருத்துக்களை உள்ளடக்கும் வகையில் எளிதான பொறிமுறையொன்று தயாரிக்கப்பட வேண்டும் என்றும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இந்தக் குழுவுக்கு உதவவும், அறிக்கையைத் தயாரிப்பதற்கும் கல்வி அமைச்சு, கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைக்கல்வி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம், நீதி அமைச்சு, சட்டத்தரணிகள் சங்கம் ஆகியவற்றை உள்ளடக்கிய தொழில்நுட்பக் குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

சட்டத்தை மற்றுமொரு பாடமாக அல்லாமல், அதை முறையாக பாடத்திட்டத்தில் சேர்க்கவும், பாடசாலை மாணவர்களுக்கு சட்டத்தைக் கற்பிப்பதில் ஏனைய நாடுகளின் அனுபவங்களை ஆராயவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில், உபகுழுவின் உறுப்பினர்களான நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரவூப் ஹக்கீம், சிவஞானம் சிறிதரன், வீரசுமன வீரசிங்ஹ, சாகர காரியவசம், அமரகீர்த்தி அத்துகோரல, டயனா கமகே, மேஜர் சுதர்ஷன தெனிபிட்டிய ஆகியோரும் தேசிய கல்வி நிறுவகம், நீதி அமைச்சு மற்றும் சட்டத்தரணிகள் சங்கத்தின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மியன்மாரில் இன்றும் 16 பேர் சுட்டுக்கொலை







மியன்மாரின் பாதுகாப்புப் படையினர் இன்று காலை சனிக்கிழமையன்று குறைந்தது 16 ஆர்ப்பாட்டக்காரர்களை சுட்டுக் கொன்றதாக அங்கிருந்துவரும் செய்தி அறிக்கைகள் மற்றும் சாட்சிகள் தெரிவிக்கின்றன.

அதேநேரம் ஆளும் ஆட்சிக்குழுவின் தலைவர் இராணுவம் மக்களைப் பாதுகாத்து ஜனநாயகத்திற்காக பாடுபடும் என்றார்.

இன்று ஆயுதப்படைகளுக்கு வெட்கக்கேடான நாள் என இராணுவ ஆட்சிக்குழுவுக்கு எதிரான பதவி நீக்கம் செய்யப்பட்ட சட்டமியற்றும் குழுவான CRPH செய்தித் தொடர்பாளர் டாக்டர் சாசா செய்தி ஊடகத்திற்கு கருத்து தெரிவித்துள்ளார். ஆர்ப்பாட்டங்கள் முதலில் வெடித்ததிலிருந்து 300 இற்கும் மேற்பட்ட அப்பாவி பொதுமக்களைக் கொன்ற பின்னர் இராணுவ தளபதிகள் ஆயுதப்படை தினத்தை கொண்டாடுகிறார்கள், என்று அவர் மேலும் கூறினார்.

இன்று சனிக்கிழமை அதிகாலையில் யாங்கோனின் புறநகரில் உள்ள ஒரு காவல் நிலையத்திற்கு வெளியே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள் மீது பாதுகாப்புப் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் குறைந்தது 4 பேர் கொல்லப்பட்டதாக மியன்மார் நவ் (Myanmar Now) தெரிவித்துள்ளது. குறைந்தது 10 பேர் காயமடைந்ததாக செய்தி ஊடகம் தெரிவித்துள்ளது.

21 வயதிற்குட்பட்ட உள்ளூர் கால்பந்து அணியில் விளையாடும் ஒரு இளைஞன் உட்பட மூன்று பேர் இன்சைன் மாவட்டத்தில் நடந்த போராட்டத்தில் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று உள்ளூர்வாசி ஒருவர் றோய்ட்டர் செய்திசேவையிடம் தெரிவித்தார். கிழக்கில் லாஷியோ நகரில் நான்கு பேரும், யாங்கோனுக்கு அருகிலுள்ள பாகோ பிராந்தியத்தில் வெவ்வேறு இடங்களின் நால்வரும் கொல்லப்பட்டதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அதேநேரம் வடகிழக்கில் ஹோபின் நகரில் ஒருவர் கொல்லப்பட்டார்.

ஆயுதப்படை தினத்தை குறிக்கும் வகையில் தலைநகர் நெய்பிடாவில் ஒரு இராணுவ அணிவகுப்புக்கு தலைமை தாங்கிய பின்னர், மூத்த ஜெனரல் மின் ஆங் ஹ்லேங் தேர்தல்களை நடத்துவதாக உறுதியளித்த போதிலும் எந்த ஒரு திகதியும் குறிப்பிடவில்லை.

ஜனநாயகத்தை பாதுகாக்க இராணுவம் முழு தேசத்துடனும் கைகோர்க்க முற்படுகிறது என்று ஜெனரல் அரசு தொலைக்காட்சியில் ஒரு நேரடி ஒளிபரப்பில் கூறினார். மேலும் தமது அதிகாரிகள் மக்களைப் பாதுகாக்கவும், நாடு முழுவதும் அமைதியை மீட்டெடுக்கவும் முயல்வதாகவும் தெரிவித்தார்.

## கொவிட் பற்றி தவறான தகவல்களை பரப்பிய வெனிசுலா அதிபரின் பேஸ்புக் பக்கம் முடக்கம்



கொவிட் – 19 பற்றி தவறான தகவல்களை பரப்புவதற்கு எதிரான கொள்கைகளை மீறியதற்காக வெனிசுலா அதிபர் நிக்கோலா மதுரோவின் பக்கத்தை பேஸ்புக் முடக்கியுள்ளது, ஆதாரங்கள் இல்லாமல், நோயைக் குணப்படுத்த முடியும் என்று அவர் கூறும் ஒரு தீர்வை ஊக்குவிப்பதாக அந்த நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் இன்று சனிக்கிழமை தெரிவித்தார்.

முன்னதாக பேஸ்புக் ஒரு வீடியோவை நீக்கியுள்ளது ஏனெனில் இது தவறான கூற்றுக்களுக்கு எதிரான கொள்கையை மீறுகிறது. அதில் மதுரோ மருந்துகளை ஊக்குவிக்கும் முகமாக கொவிட் – 19 பெறுவதைத் தடுப்பதற்கு ஏதேனும் உத்தரவாதம் அளிக்க முடியும் அல்லது கொவிட் – 19 இலிருந்து மீட்க உத்தரவாதம் அளிக்க முடியும். என்று சரப்பட பதிவொன்றை இட்டிருந்தார்.

மேலும் பேஸ்புக் தெரிவிக்கையில் WHO (உலக சுகாதார அமைப்பு) இன் வழிகாட்டுதலை நாங்கள் பின்பற்றுகிறோம், தற்போது வைரஸைக் குணப்படுத்த மருந்து இல்லை என்று கூறுகிறது என்று செய்தித் தொடர்பாளர் ராய்ட்டர்ஸிடம் தெரிவித்தார். எங்கள் விதிகளை மீண்டும் மீண்டும் மீறுவதால், நாங்கள் 30 நாள்களுக்கு பக்கத்தை முடக்குகிறோம், அந்த நேரத்தில் அது படிக்க மட்டுமே இருக்கும்.பதிவுகள் ஏதும் பதிவிடமுடியாது.

## பாகிஸ்தானில் கொரோனா பாதிப்புடன் நேரடியாக கூட்டத்தில் பங்கேற்ற இம்ரான்

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானுக்கு (வயது 68) கடந்த 20 ஆம் திகதி கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது. அதற்கு 2 தினங்களுக்கு முன்புதான் அவர் கொரோனத் தடுப்பூசி போட்டிருந்தார்.

இதைப்போல அவரது மனைவி பஸ்ரா பிபிக்கும் தொற்று பாதிப்பு உறுதி செய்யப்பட்டு உள்ளது. இதனால் இருவரும் வீட்டு தனிமையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இது பாகிஸ்தான் முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தி இருக்கிறது.

இந்த அதிர்ச்சி மறைவதற்குள் இம்ரான்கான் செய்துள்ள மற்றொரு செயல் நாடு முழுவதும் மீண்டும் அதிர்ச்சியை கொடுத்திருக்கிறது.

அதாவது கொரோனா பாதித்து வீட்டு தனிமையில் இருக்கும் அவர், நேரடியாக ஆலோசனை கூட்டம் ஒன்றை நடத்தி இருக்கிறார். தனது ஊடகக்குழுவினருடன் நேற்று முன்தினம் பனிகலா வீட்டில் இந்த ஆலோசனை கூட்டத்தை அவர் தலைமையேற்று நடத்தி உள்ளார்.

இம்ரான்கான் ஒரு இருக்கையிலும், அவருக்கு அருகே ஊடகக் குழுவினர் வேறு இருக்கைகளிலும் அமர்ந்திருக்கும் புகைப்படங்கள் சமூக ஊடகங்களில் வெளியாகின. உடனே நாடு முழுவதும் இதற்கு எதிர்ப்பு கிளம்பியது.



பாகிஸ்தானில் கொரோனா பாதித்த ஒருவர் 9 முதல் 14 நாள்களுக்கு தனிமையில் இருக்க வேண்டும் என்பது கட்டாயம் ஆகும். ஆனால் இம்ரான்கானோ கொரோனா உறுதி செய்யப்பட்ட ஒரு வாரத்துக்குள் இந்த கூட்டத்தை நேரடியாக நடத்தியிருப்பதற்கு எதிர்க்கட்சிகள் மற்றும் பொதுமக்கள் தரப்பில் பலத்த கண்டனங்கள் எழுந்துள்ளன.

நாட்டில் கொரோனாவின் 3 ஆவது அலை பரவி வரும் நிலையில், கொரோனாவுக்கு எதிராக கடைப்பிடிக்கப்படும் நிலையான செயற்பாட்டு நெறிமுறைகளை பிரதமரே மீறலாமா? என்று கேள்வி எழுப்பியுள்ள எதிர்க்கட்சிகள், இந்த கூட்டத்தில் பங்கேற்ற அனைவர் மீதும் வழக்கு பதிவு செய்ய வேண்டும் என வலியுறுத்தி உள்ளன.

பாகிஸ்தான் பிரதமரின் இந்த அலட்சிய செயல் நாட்டு மக்களுக்கு பலத்த கோபத்தை ஏற்படுத்தி இருக்கிறது. இது தொடர்பாக சமூக ஊடகங்களில் பலரும் இம்ரான் கானுக்கு எதிர்ப்புகள் தெரிவித்து வருகின்றனர்.

கொரோனா பாதிப்புடன் இந்த கூட்டம் நடத்த வேண்டியது அவசியம்தானா?, காணொலிக் காட்சி மூலம் நடத்துவதற்கு பல்வேறு வழிகள் இருக்கும்போது அதை பரிசீலிக்காதது ஏன்? என சரமாரியாக கேள்விகளை எழுப்பி வருகின்றனர்.

அதேநேரம் பாகிஸ்தான் அரசின் செய்தித் தொடர்பாளர்கள் யாரும் பிரதமர் இம்ரான்கானின் செயலை நியாயப்படுத்தவில்லை. இது தொடர்பாக ஊடகங்களை சந்திப்பதை அவர்கள் தவிர்த்து வருகின்றனர்.

எனினும் இந்த கூட்டத்தில் பங்கேற்றவர்களில் ஒருவரான யூசுப் பெயிக் மிர்சா, இந்த விமர்சனங்களை நிராகரித்து உள்ளார். அவர் கூறுகையில், 'நாங்கள் எல்லோரும் முகக்கவசம் அணிந்திருந்தோம். யாரும், யாரையும் தொடவில்லை. அங்கு நாங்கள் எதையும் உண்ணவோ, குடிக்கவோ இல்லை. பிரதமரிடம் இருந்து குறிப்பிட்ட இடைவெளியில்தான் அமர்ந்திருந்தோம்' என்று தெரிவித்தார்.

## எகிப்தில் இரு ரயில்கள் மோதுண்டு விபத்து 32 பேர் பலி; 100 இற்கும் அதிகமானோர் காயம்

எகிப்தில் இரண்டு ரயில்கள் மோதி விபத்துக்குள்ளானதில் 32 பேர் உயிரிழந்தனர்.

தெற்கு எகிப்தின் சோஹாக் மாகாணத்தில் தஹ்தா மாவட்டத்தில், தலைநகர் கெய்ரோவிலிருந்து 460 கிலோ மீற்றர் தொலைவில் இந்த விபத்து நேரிட்டுள்ளது. புறப்பட்டுக் கொண்டிருந்த ரயிலின் பின்புறமாக அதே தடத்தில் வேகமாக வந்த மற்றொரு ரயில் பயங்கர வேகத்தில் மோதியது.

இந்த விபத்தில் நிகழ்விடத்திலேயே 32 பேர் உயிரிழந்தனர். 100 இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயங்களுடன் பல்வேறு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பின்புறம் வந்த ரயிலின் அவசரகால பிரேக் பிடிக்காததால் விபத்து நடந்திருப்பது தெரியவந்துள்ளது.



சந்நிதி Institute

ஆங்கில, சிங்கள வகுப்புக்கள்.
தொழில்புரிவோருக்கான சிங்களம்.
தரம் - 6 முதல் பல்கலைக்கழகம் வரையான மாணவர்களிற்கான ஆங்கிலம்.
பாட புத்தகமும் கற்பிக்கப்படுகிறது.

S.K.Manokaran
இல.72 இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.
077 767 7773

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய வெளியுறவுத்துறை விரைந்து நடவடிக்கை கைதான இந்திய மீனவர்கள் 54 பேரும் விடுதலை

இராமேஸ்வரம், ஜெகதாபட்டினம், காரைக்கால் பகுதிகளைச் சேர்ந்த 54 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கடந்த 24 ஆம் திகதி இரவு கைது செய்தனர். இவர்களின் 5 படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டன. இதற்கு மீனவர்கள் மற்றும் அரசியல் கட்சிகளிடம் இருந்து கடும் எதிர்ப்பு கிளம்பியது. முறைப்பாடு மனுக்களும் பல தரப்பினரிடமும் கையளிக்கப்பட்டன.

இதையடுத்து, இந்திய மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் மீனவர்களை விடுவிக்கு மாறு இலங்கை அரசிடம் வலியுறுத்தியிருந்தது. இதையடுத்து கைதான மீனவர்கள் அனைவரையும் விடுதலை செய்யுமாறு நேற்றுக் காலை இலங்கை அரசு உத்தரவிட்டது. இலங்கை நீதி மன்ற உத்தரவுப்படி கைதான மீனவர்களில் 40 பேர் நேற்று மதியமளவில் விடுதலை செய்யப்பட்டனர். மீதமான 14 பேரும் இன்று காலை விடுவிக்கப்பட்டுள்ளனர் என செய்திகள் தெரிவிக்கின்றன.



## சி.பி.ஐ. உள்ளிட்ட மத்திய அமைப்புகள் மீது விசாரணை நடத்த கேரள அரசு முடிவு

சி.பி.ஐ. உள்ளிட்ட மத்திய விசாரணை அமைப்புகளுக்கு எதிராக நீதி விசாரணை நடத்த கேரள அரசு முடிவு செய்துள்ளது.



கேரளாவின் திருவனந்தபுரத்தில் உள்ள ஐக்கிய அரபு அமீரக தூதரக பொதியில் தங்கம் கடத்தல், வெளிநாட்டுக்கு டொலர் கடத்தல் உள்ளிட்ட வழக்குகளை சி.பி.ஐ., மத்திய அமுலாக்கத் துறை, சுங்க இலாகா உட்பட மத்திய விசாரணை அமைப்புகள் விசாரித்து வருகின்றன.

இவை கேரள அரசின் வளர்ச்சித் திட்டங்களுக்கு முட்டுக்கட்டை போடுவதாக முதல்வர் பினராய் விஜயன் குற்றஞ்சாட்டி வருகிறார். டொலர் கடத்தல் வழக்கில் இவரையும் சேர்க்க சதி செய்ததாக சமீபத்தில் அமுலாக்கத் துறை அதிகாரிகள் மீது கேரள பொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர்.

இந்நிலையில், கேரளாவின் வளர்ச்சிக்கு இடைஞ்சல் செய்வதாக சி.பி.ஐ. உள்ளிட்ட மத்திய அமைப்புகளுக்கு எதிராக நீதி விசாரணை நடத்த கேரள அரசு முடிவு செய்துள்ளது. திருவனந்தபுரத்தில் முதல்வர் பினராய் விஜயன் தலைமையில் நேற்று நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

ஓய்வுபெற்ற நீதிபதி மோகனன் தலைமையில் இந்த விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட உள்ளது. தற்போது தேர்தல் நடைமுறைச் சட்டம் அமுலில் இருப்பதால் இதற்காக தேர்தல் ஆணையத்தின் அனுமதி பெறவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# விவசாயிகள் மறியல் போராட்டம்!

## பஞ்சாப், அரியானாவில் ரயில் சேவை பாதிப்பு



மத்திய அரசின் புதிய வேளாண் சட்டங்களை இரத்துச்செய்ய வலியுறுத்தி விவசாயிகள் நேற்று நடத்திய நாடு தழுவிய முழு அடைப்புப் போராட்டத்தால் பஞ்சாப் மற்றும் அரியானாவில் ரயில் சேவைகள் பாதிப்படைந்தன.

மத்திய அரசின் சர்ச்சைக்குரிய மூன்று புதிய வேளாண் சட்டங்களை இரத்துசெய்யக்கோரி, டெல்லி எல்லையில் உள்ள சிங்கு, காஜிப்பூர் மற்றும் திக்ரியில் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த விவசாயிகள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இப்போராட்டம் தொடங்கப்பட்டு நேற்றுடன் 4 மாதங்கள் முடிந்துள்ளன. இதை முன்னிட்டு, நேற்றுக் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை நாடு தழுவிய அளவில் முழு அடைப்பு போராட்டம் நடத்த விவசாயிகள் சங்கங்கள் அழைப்பு விடுத்திருந்தன. இதற்குப் பல்வேறு எதிர்க்கட்சிகளும் ஆதரவு தெரிவித்தன.

இதில், விவசாய சங்கங்கள், வர்த்தக சங்கங்கள் போன்றவை கலந்து கொண்டன. தமிழகம் உட்பட சட்டப்பேரவைத் தேர்தல் நடக்கும் 5 மாநிலங்களில் மட்டும் இந்த முழு அடைப்பு நடத்தப்படவில்லை.

பஞ்சாப் மற்றும் அரியானாவில் 44 இடங்களில் ரயில் தண்டவாளங்களில் அமர்ந்து விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன் காரணமாக புகையிரதப் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

இது குறித்து வடக்கு ரயில்வே செய்தித் தொடர்பாளர் தீபக் குமார் கூறுகையில், விவசாயிகள் நடத்திய மறியலால் 35 பயணிகள் ரயில்களதும் 40 சரக்கு ரயில்களினதும் போக்குவரத்துகள் பாதிக்கப்பட்டன, என்று தெரிவித்துள்ளார்.

## மதுரை தேர்தல் பிரசாரத்தில் பிரதமர் மோடி பங்கேற்கிறார்



தமிழக சட்டப்பேரவைத் தேர்தலின் பிரசாரம் சூடு பிடித்துள்ள நிலையில் மதுரையில் ஏப்ரல் இரண்டாம் திகதி நடைபெறவுள்ள பிரசாரப் பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி பங்கேற்கவுள்ளார்.

பிரதமர் கலந்து கொள்ளும் பொதுக்கூட்ட மேடை அமைப்பதற்கான கால்கோள் விழாவில் பா.ஜ.கவின் கூட்டணியிலுள்ள அ.தி.மு.க. அமைச்சர்கள் செல்லூர் ராஜு, ஆர்.பி.உதயகுமார் உள்ளிட்டோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

## இந்திய மேற்கு வங்க தேர்தல் களத்தில் துப்பாக்கிச்சூட்டில் பாதுகாப்பு வீரர்கள் காயம்



மேற்கு வங்கத்தில் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெற்று வரும் நிலையில் அங்கு துப்பாக்கிச் சூடு நடைபெற்றுள்ளது.

பக்வான்பூர் தொகுதியில் வாக்குப்பதிவு தொடங்கும் முன் வாக்காளர்களை சிலர் அச்சுறுத்த முயன்றதாகவும் அவர்களைத் தடுத்தபோது அந்த மர்மநபர்கள் துப்பாக்கியால் சுட்டதில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த இரண்டு வீரர்கள் காயம் அடைந்ததாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதேவேளை, திரிணாமுல் காங்கிரஸ் கட்சியினருடன் சிலர் சேர்ந்து வாக்களிப்பு நடைபெறும் இன்னொரு பகுதியான அர்கோலில் வாக்காளர்களை அச்சுறுத்தியதாக பா.ஜ.கவினர் புகார் அளித்துள்ளனர்.

## மகாராஷ்டிராவில் கொரோனா தீவிரம் நாளை முதல் இரவுநேர ஊரடங்கு

மகாராஷ்டிரத்தில் கொரோனாத் தொற்று பரவல் வேகமாக அதிரிப்பதை அடுத்து, நாளை ஞாயிற்றுக்கிழமை முதல் இரவுநேர ஊரடங்கு அமுல்படுத்தப்படும் என்று முதல்வர் உத்தவ் தாக்கரே உறுதிப்படுத்தியுள்ளார்.

மகாராஷ்டிரத்தில் நேற்று வெள்ளிக்கிழமை ஒரே நாளில் புதிதாக 36,902 பேருக்கு கொரோனாத் தொற்று அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இது, தினசரிப் பாதிப்பில் இதுவரை இல்லாத அதிகபட்ச அளவாகும்.

இந்நிலையில், மாநிலத்தில் கொரோனா பரவல் சூழல் குறித்த ஆய்வுக் கூட்டம் முதல்வர் உத்தவ் தாக்கரே தலைமையில் நடைபெற்றது. காணொலி முறையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அமைச்சர்கள், மாவட்ட ஆட்சியாளர்கள், காவல்துறை கண்காணிப்பாளர்கள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் தலைவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்துக்குப் பிறகு, மாநிலம் முழுவதும் நாளை ஞாயிற்றுக்கிழமை முதல், இரவு நேர ஊரடங்கு அமுல்படுத்தப்படும் என்று முதல்வர் உத்தவ் தாக்கரே உத்தரவு பிறப்பித்தார். இதுதொடர்பாக, அவா வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'வணிக வளாகங்கள் இரவு 8 மணி முதல் காலை 7 மணி வரை மூடப்பட்டிருக்க வேண்டும். இதை உள்ளூர் அதிகாரிகள் உறுதிப்படுத்த வேண்டும். கொரோனா பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றாதவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்' என்று தெரிவித்துள்ளார்.

மாநிலம் தழுவிய முழு ஊரடங்கை அமுல்படுத்தும் திட்டமில்லை என்றும் தேவைப்பட்டால் அதிகம் பாதிப்புக்குள்ளாகும் மாவட்டத்தில் முழு ஊரடங்கு அமுல்படுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதே வேளை மும்பையில் தொடர்ந்து மூன்றாவது நாளாக வெள்ளிக்கிழமையும் 5,000 இற்கும் மேற்பட்டோருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. மும்பையில் வெள்ளிக்கிழமை 5,513 பேருக்கும் வியாழக்கிழமை 5,504 பேருக்கும் புதன்கிழமை 5,185 பேருக்கும் தொற்று இருப்பது கண்டறியப்பட்டது. புனே மாவட்டத்தில் புதிதாக 7,090 பேருக்கு கொரோனாத் தொற்று அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

### இந்தியாவில் கொரோனா பாதிப்பு

## இறப்பு வீதம் குறைய தொற்று அதிகரிப்பு

இந்தியாவில் கொரோனாவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 1.61 லட்சத்தை தாண்டியுள்ளதாகவும் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 1.19 கோடியை கடந்துள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இன்று காலை 8 மணியுடன் முடிந்த 24 மணி நேரத்தில் நாட்டில் கொரோனாவால் புதிதாகப் பாதித்தவர்கள், குணமடைந்தோர், பலியானோர், இறப்பு விகித நிலைவரம் குறித்து இந்திய மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

புதிதாக 62,258 பேர் தொற்றுக்குள்ளாகியிருப்பதால் மொத்த பாதிப்பு எண்ணிக்கை 1,19,08,910 ஆக உயர்ந்துள்ளதாகவும் இறப்பு எண்ணிக்கை 291 ஆல் அதிகரித்து 1,61,240 ஆக உள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொற்றில் இருந்து ஒரே நாளில் 30,386 பேர் குணமடைந்து, மொத்தமாக குணமடைந்தோர் எண்ணிக்கை 1,12,95,023 ஆக உயர்ந்துள்ளது என்றும் குணமடைந்தோர் வீதம் 94.85% ஆக அதிகரித்துள்ள அதேவேளை உயிரிழப்பு வீதம் 1.35% ஆக குறைந்துள்ளது என்றும் அறிக்கை கூறுகிறது.

அந்த அறிக்கையில், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட 4,52,647 பேருக்கு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்படுவதாகவும் இது வரை இந்தியாவில் 5,81,09,773 பேருக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாகவும் விபரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

## வாக்குப்பதிவு இயந்திரத்தில் மோசடி: மேற்கு வங்க தேர்தலில் சர்ச்சை

மேற்குவங்க மாநிலத்தில் இன்று முதல்கட்ட வாக்குப்பதிவு தொடங்கி நடைபெற்று வருகிறது. இந்த நிலையில், கிழக்கு மிட்னாபூர் தொகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் வாக்குச்சாவடியில் திரிணமூல் கட்சிக்கு வாக்களித்தாலும் வாக்களிப்பு இயந்திரத்தில் பா.ஜ.கவுக்கு வாக்களித்ததாகவே காட்டுவதாக புகார் எழுந்தது. இதையடுத்து அந்த வாக்குச்சாவடியில் மட்டும் வாக்குப்பதிவு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. ஆனால், வாக்குச்சாவடி அதிகாரி இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ளார்.

மேற்குவங்க மாநில சட்டப்பேரவைத் தேர்தலுக்கான முதல்கட்ட வாக்குப்பதிவு மலைவாழ் மக்கள் அதிகம் வசிக்கும் 5 மாவட்டங்களிலுள்ள 30 தொகுதிகளுக்கு இன்று நடைபெறுகிறது. காலை 7 மணிக்குத் தொடங்கிய வாக்குப்பதிவு, மாலை 6 மணி வரை நடைபெற உள்ளது. 30 தொகுதிகளிலும் 21 பெண் வேட்பாளர்கள் உள்பட 191 பேர் போட்டியிடுகின்றனர்.

கடந்த 2016 தேர்தலில், இந்தத் 30 தொகுதிகளில் 27 இல் திரிணாமுல் காங்கிரஸ் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது. மேற்குவங்க சட்டப்பேரவைத் தேர்தல் 8 கட்டங்களாக நடைபெறவுள்ளது. மொத்தம் 294 தொகுதிகளை கொண்ட மேற்குவங்கத்தில் முதல்கட்டமாக 27ஆம் திகதியும், இறுதிக் கட்ட வாக்குப் பதிவு ஏப்ரல் 29 ஆம் திகதியும், வாக்கு எண்ணிக்கை மே 2 ஆம் திகதியும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு மாநகர மேயரால் ஆணையருக்கு எதிராக வழக்கு

## தடை எழுத்தாணை கோரி வழக்கு



மட்டக்களப்பு மாநகர மேயரால், ஆணையாளருக்கு எதிராக தடை எழுத்தாணை கோரி மட்டக்களப்பு நீதி மன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், இது தொடர்பான வழக்கு நேற்று இடம்பெற்ற நிலையில், ஆணையாளரிடம் நீதிமன்றம் விளக்கம் கோரி உத்தரவிட்டுள்ளது.

மாநகர மேயர் சார்பாக முன்னிலையான சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில் -

மட்டக்களப்பு மாநகர மேயரால், ஆணையாளருக்கு எதிராக தடை எழுத்தாணை கோரி மட்டக்களப்பு நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மாநகர சட்டத்தின்படி மேயருக்கு இருக்கின்ற அதிகாரங்களை, விரும்பினால் ஆணையாளருக்கு பாரப்படுத்தலாம். அப்படியாக இந்தப் புதிய ஆணையாளர் வந்த போது 10 அதிகாரங்கள் கையளிக்கப்பட்டிருந்தன.

ஆனால், அதற்குப் பின்னர், கடந்த பெப்ரவரி 11ஆம் திகதி இன்னொரு சபைத் தீர்மானத்தின் மூலமாக கையளிக்கப்பட்ட அதிகாரங்கள் மீளப் பெறப்பட்டன.

அந்த அதிகாரங்களை சட்டப்படி மீளப்பெற்றிருந்தாலும் கூட தான் அதற்கு ஒழுகி நடக்கமாட்டேன் என்றும் அந்த அதிகாரங்களைத் தானே பயன்படுத்துவேன் என்றும் ஆணையாளர் விடாப்பிடியாகச் செயற்பட்டுக் கொண்டிருப்பதன் காரணமாக அவ்வாறு அப்படியான செயற்பாட்டில் இருந்து தவிர்ப்பதற்கும் அந்த அதிகாரங்களை அவர் உபயோகிப்பதைச் சட்டப்படியாக நிறுத்துவதற்கும் இவ்வாறு தடுக்கும் எழுத்தாணை கோரி விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது.

நேற்றையதினம் இதனை நீதி மன்றத்திலே ஆதரித்த போது, மேயர் மனுதாரராகக் கேட்டுள்ள நிவாரணங்கள் ஏன் வழங்கப்படக்கூடாது என்று கேட்டு அறிவித்தல் அனுப்பும்படி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த அறிவித்தல், ஆணையாளருக்கும் கிழக்கு மாகாணத்தின் உள்ளூராட்சி ஆணையாளருக்கும் (இவர் இரண்டாவது பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ளார்) அனுப்பும்படி நீதிமன்றம் கட்டளை பிறப்பித்துள்ளது.

இதன்படி, எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி வியாழக்கிழமை வழக்கினை எடுக்கும்போது அவர்கள் நீதிமன்றத்தில் காரணம் காட்டவேண்டும் என்று சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

# பொலிஸ் உத்தியோகத்தர் கண்டெடுத்த பணப்பை



பொலிஸ் உத்தியோகத்தரால் கண்டெடுக்கப்பட்ட பணப்பை ஒன்று உரியவரிடம் கையளிக்கப்பட்ட நிகழ்வு நேற்று காலை மட்டக்களப்பு சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் பணிமனையில் இடம் பெற்றது.

மட்டக்களப்பு கொள்வனவு பொலிஸ் பிரிவில் கடமை புரியும் பொலிஸ் உத்தியோகத்தரான ஆர்.பி.டி.துமிந்த என்ற பொலிஸ் உத்தியோகத்தரே மேற்படி பணப்பையைக் கண்டெடுத்தார்.

அம்பாறையிலிருந்து மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்திற்கு கடமைக்கு வந்து கொண்டிருந்த போதே மாவடி முன்மாரி பகுதியில் வீதியில் கிடந்த பணப்பையைக் கண்டெடுத்துள்ளார், குறித்த பணப்பையில் 11,300 ரூபா பணம், சாரதி அனுமதிப் பத்திரம்,ஏ.ரீ.எம். அட்டை, வாகன காப்புறுதி,தேசிய அடையாள அட்டை உட்பட பல முக்கிய ஆவணங்களும் அடங்கியிருந்தன.

குறித்த பணப்பைக்குச் சொந்தக்காரரான முனைக்காட்டைச் சேர்ந்த குணரட்ணம் கனிஸ்டன் உயர் வகுப்பு மாணவனிடம் மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத் மாசிங்க பணப்பையை ஒப்படைத்தார்.

பணப்பையைக் கண்டெடுத்த பொலிஸ் உத்தியோகத்தர் மாத்தறை பொலிஸ் நிலையத்திலிருந்து கடந்த வாரமே மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்திற்கு இடமாற்றம் பெற்று வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

குறித்த பொலிஸ் உத்தியோகத்தரை அனைவரும் பாராட்டி வருகின்றனர். அவருக்கு இவ்வருடத்திற்கான சாதனை படைத்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் விருதும் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆலய மணிமண்டபத்தில் இலவச தியானப் பயிற்சி

கலியுக மனிதர்களுக்கு மிகவும் அவசியமான அமைதி மற்றும் ஆனந்தத்தை அனுபவிக்க ஜெபமும் தியானமும் இன்றியமையாதது இவற்றை இலகுவில் அடைவதற்கான இலவச தியானப் பயிற்சி மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலய மணிமண்டபத்தில் நாளை (28) காலை 8.00 மணி முதல் 9.30 மணிவரை ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் நடைபெறவுள்ளது.

இனம் மதம் மொழி கடந்து அனைத்து மக்களும் கலந்து கொண்டு மன அமைதி பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

கலியுகக் கனவான்களே கலியுகம் (ஆசை யுகம்) இந்த யுகத்தில் உள்ள மனிதர்களில் ஆன்மீக ஈடுபாடு என்பது பெரியதோர் சவாலாக உள்ளது என்பது யாவரும் உணரக் கூடியதாகவுள்ளது.

ஏனெனின் எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும் அவர்கள் மனிதப்பிறவி எடுத்தால் அவர்களது பழைய பிறவி சம்ஸ்காரம் என்ற விடயம் முக்கியமாக எடுத்துக் கொள்ள வேண்டியுள்ளது. ஏனெனில் முற்பிறவி ஆசைகளின் தொடர்ச்சியே இப்பிறவி வாழ்க்கையில் பெரும் பங்கு வகிக்கின்றது என்பது இன்றியமையாத விடயமாக கொள்ளப்படுகின்றது. அது மட்டுமன்றி இந்தப்பிறவியை உள்ள சமுதாயத்தின் கட்டமைப்பும் கூட ஒரு பங்கு வகிக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கதாக வுள்ளது.

# புதிதாக முளைக்கின்ற புல்லை உண்ண நாடி வருகின்ற யானைக் கூட்டம்



யானைக் கூட்டம் ஒன்று புதிதாக முளைக்கின்ற புல் இனங்களை உண்பதற்காக நாடி வருகின்றனது.

அம்பாறை மாவட்டத்தில் நேற்று மதியம் திடிரென சம்மாந்துறை ஊடாக காரைதீவு மாவடிப்பள்ளி நிந்தவூர் பகுதிகளை ஊடறுத்து யானைகள் இவ்வாறு வருகை தந்துள்ளன.

இதன் போது குறித்த யானைகள் அங்குள்ள புதிய புல் இனங்களை உண்ணுவதுடன் கூட்டத்தில் உள்ள யானைக் குட்டிகள் விளையாடுவதையும் காண முடிந்தது.

குறித்த யானைக்கூட்டத்தை பார்வையிட மாவடிப்பள்ளி பாலம், காரைதீவு, நிந்தவூர், சம்மாந்துறை பகுதிகளில் பொதுமக்கள் குவிந்து நின்று யானைக்கூட்டத்தை அவதானிப்பதை காணமுடிகிறது.

மேலும் இப்பிரதேசத்தில் அண்மையில் வேளாண்மை அறுவடை மேற்கொள்ளப்பட்ட நிலையில் தீ வைக்கப்படுவதனாலும் அங்கு கொட்டப்படும் குப்பைகளை தினந்தோறும் 100க்கும் மேற்பட்ட யானைகள் உண்ணுவதற்கு வருகை தருவதுடன் அருகில் உள்ள பொதுமக்களின் உடமைகளுக்கும் சேதம் விளைவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# கதிரவெளி காட்டுப்பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி

மட்டக்களப்பு, மார்ச் 27

மட்டக்களப்பு வாகரை பொலிஸ் பிரிவிலுள்ள கதிரவெளி காட்டுப்பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்றை முற்றுகையிட்ட போது உற்பத்தியில் ஈடுபட்ட ஒருவரை நேற்று வியாழக்கிழமை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய குறித்த காட்டுப்பகுதியினை முற்றுகையிட்ட போது சட்டவிரோதமாக கசிப்பு மற்றும் 400 லீற்றர் கோடா மீட்டுள்ளதாக காவல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

கைதானவர் கதிரவெளி பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும் குறித்த சந்தேக நபரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக காவல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

# அம்பாறையில் 24 பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக மாற்றம்

அம்பாறை, மார்ச் 27

அம்பாறை மாவட்டத்தில் மேலும் 24 பாடசாலைகள் தேசியப் பாடசாலைகளாக தரமுயர்த்தப்படவிருக்கின்றன. முதலாம் கட்டத்தில் ஆறு பாடசாலைகளும் இரண்டாம் கட்டத்தில் 18 பாடசாலைகளும் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றன.

இருந்தபோதிலும் இரண்டு கட்டங்களிலுள்ள பாடசாலைகள் ஏககாலத்திலேயே அமுலுக்கு வரும் வகையில் செயற்பாடுகள் நடந்தேறி வருகின்றன.

முதலாம் கட்டத்தில் கல்முனை வலயத்தில் மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியும், காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரியும், சம்மாந்துறை வலயத்தில் நாவிதன்வெளி அன்னமலை மகாவித்தியாலயமும்,லாகுகலை வலயத்தில் பாணமை மகாவித்தியாலயமும், தமனவலயத்தில் மடவளாந்த மகாவித்தியாலயமும், மகாஓய வலயத்தில் கெப்பிட்டிபொல மகா வித்தியாலயமும் தெரிவாகியுள்ளன.

இரண்டாம் கட்டத்தில் அக்கரைப்பற்று வலயத்தில் ஒலுவில் அல்ஹம்றா மகாவித்தியாலயமும், அக்கரைப்பற்று ஆயிஷா பாலிகா முஸ்லிம் மகா வித்தியாலயமும், அஸ்ஷிறாஜ் மகளிர் வித்தியாலயமும், பொத்துவில் அல் இர்பான் மகளிர் வித்தியாலயமும், கல்முனை வலயத்தில் மருதமுனை மஸ் மகாவித்தியாலயமும், உவெஸ்லி உயர்தர பாடசாலையும், கல்முனை மகுமுத் மகளிர் கல்லூரியும், அல்பகுரியா மகா வித்தியாலயமும், நிந்தவூர் அல்மஸ்ஹர் மகா வித்தியாலயமும், சம்மாந்துறை வலயத்தி லுள்ள தாருஸ்ஸலாம் மகாவித்தியாலயமும், அல்அர்த் மகாவித்தியாலயமும், நாவிதன்வெளி சாளம்பைக்கேணி அஸ்ஷிறாஜ் மகாவித்தியாலயமும் ஏனைய ஆறு சிங்கள பாடசாலைகளும் தெரிவாகியுள்ளன.

மத்திய கல்வியமைச்சின் உயரதிகாரிகள் குழுவினர், திருகோணமலையிலுள்ள கிழக்கு மாகாண கல்வித்திணைக்களத்தில் மாகாண கல்விப்பணிப்பாளர், வலயக்கல்விப்பணிப்பாளர்கள் மற்றும் மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவர்கள் அடங்கிய கூட்டத்தில் மேற்படி பாடசாலைகள் அங்கீகரிக்கப்பட்டன.

இத்தெரிவில் திருக்கோவில் போன்ற ஒருசில வலயங்கள் விடுபட்டிருக்கின்றன. மட்டுமல்லாமல் மேலும் சில பாடசாலைகள் சேர்க்கப்படவேண்டும் என அபிவிருத்திக்குழுத்தலைவர்கள் வேண்டுகோள்விடுத்துள்ளனர்.

# ஒரு லட்சம் மரக்கன்றுகளை நாட்டும் திட்டம் ஆரம்பம்

வன ஜீவராசிகள் மற்றும் வன வள அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் வழிகாட்டலில் சர்வதேச வனாந்தர வாரத்தை முன்னிட்டு 'வன மறுசீரமைப்பு மூலம் ஆரோக்கியமான வாழ்க்கைக்கான பாதை' எனும் தொனிப்பொருளில் ஒரு லட்சம் மரக்கன்றுகளை நடும் வேலைத்திட்டம் நாடு பூராகவும் வனபரிபாலன திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அந்தவகையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை வட்டார வனபரிபாலன காரியாலயத்தின் ஏற்பாட்டில் மரநடுகை நிகழ்வு வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் புணாணை அரச காட்டுப் பகுதியில் இடம்பெற்றது.

மரநடுகை வேலைத் திட்டத்தில் புணாணை பௌத்த விகாரையின் விகாராதிபதி எல்லேவேவ பீதாலங்கார ஸ்தவீர தேரர், வனவிரிவாக்கல் உத்தியோகத்தர்களான எஸ்.எம்.சபீக், எம்.ஏ.ஏ.எச். இஸாரி, பகுதிவன உத்தியோகத்தர்களான ஜி.அகிலன், ஏ.எச்.கியாஸ் உள்ளிட்ட வனபரிபாலன திணைக்கள அதிகாரிகள், அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

கலந்து கொண்ட அதிதிகள் மரநடுகை வேலைத் திட்டத்தினை ஆரம்பித்துவைத்துடன், மரநடுகை வேலைத்திட்டத்தின் கீழ் முன்னூற்றி ஐம்பது (350) மரக்கன்றுகள் புணாணை அரச காட்டுப் பகுதியில் நடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக வனவிரிவாக்கல் உத்தியோகத்தர் எஸ்.எம்.சபீக் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஓய்வுபெறுவதுபற்றி சிந்திக்கவில்லை' கார் பந்தய சம்பியன் ஹமில்டன் கருத்து

ஏழு தடவைகள் போர்முலா வன் கார்பந்தயசம்பியனானலூயிஸ்ஹமில்டன், 'ஓய்வு பெறுவது பற்றி நான் இப்போது சிந்திக்கவில்லை' என்று தெரிவித்து அவரது இரசிகர்களை குதூகலப்படுத்தியிருக்கிறார்.

பஹ்ரெய்னில் நடைபெறவிருக்கும் போட்டிகளில் பங்கேற்பதற்கு தயாராகிக் கொண்டிருக்கும் ஹமில்டனிடம் நிருபர்கள் அவரது ஓய்வு எண்ணம் பற்றிக் கேட்டபோதே அவர் குறித்த பதிலை அவர்களுக்கு வழங்கியிருந்தார்.



மைக்கேல் சூமாக்கரின் ஏழு போர்முலாவன் பட்டங்கள் என்ற சாதனையை கடந்த வருடம் ஹமில்டன்சமன் செய்திருந்தார். அது மட்டுமல்லாமல் சூமாக்கர் 91 போட்டிகளில் வெற்றிபெற்றசாதனையையும் இவர் கடந்திருந்தார். தற்போது 95 போட்டி வெற்றிகளைத் தனதாக்கியிருக்கும்36வயதானஹமில்டன் மெர்சிடஸ் நிறுவனத்துடனான தனது ஒப்பந்தத்தை ஒரேயொரு வருடத்துக்கு நீடித்தபோதே அவரது ஓய்வு எண்ணம் பற்றிய சந்தேகம் எழுந்திருந்தது.

ஆயினும், அடுத்த வருடம் போர்முலா வன் பந்தய விதிமுறைகளில் சில மாற்றங்கள் வருவதால் அவற்றையும் தான் எதிர்கொள்ள தயாராக இருப்பதாக ஹமில்டன் தெரிவித்திருப்பதால் அவர் இப்போதைக்கு ஓய்வுபெறமாட்டார் என்று தெரிகிறது.

பஹ்ரெயின் பந்தயத் தொடரில் பங்கேற்கும் ஹமில்டனுக்கு 100 போட்டிகளில் வெற்றிபெற்ற சாதனையைப் படைக்கும் வாய்ப்பு காத்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.




# இங்கிலாந்து சிறப்பான பதிலடி 2ஆவது போட்டியில் சிக்சர் மழை!

இந்திய – இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஒரு நாள் சர்வதேசக் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி 6 விக் கெட்டுக்களால் வெற்றிபெற்றுள்ளது.

இந்தியாவின் புனேயில் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 50 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 336 ஓட்டங்களைக் குவித்தது. கே.எல்.ராகுல் 108, ரிஷப் பண்ட் 77, விராட் கோலி 66 ஓட்டங்களை எடுத்தனர். ரீஸ் டொப்லி, டொம் கரன் இருவரும் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி ஆரம்பம் முதலே சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி இந்தியப் பந்து வீச்சாளர்களைக் கலங்கடித்தது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் ஜேசன் ரோய் 55 ஓட்டங்களையும் ஜொனி பெயர்ஸ்டோ 124 ஓட்டங்களையும் பெற்றனர். 52 பந்துகளில் 10 சிக்ஸர்கள், 4 பவுண்டரிகளை விளாசிய பென் ஸ்டோக்ஸ் 99 ஓட்டங்களோடு ஆட்டமிழந்தார்.

இறுதியில் 4 விக்கெட்டுக்களை மட்டுமே இழந்த இங்கிலாந்து அணி 43.3 ஓவர்களில் வெற்றி இலக்கை அடைந்தது. இந்தியாவின் பிரசித் கிருஸ்ணா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இந்தப் போட்டியில் இந்திய அணியின் துடுப்பாட்டத்தின் போது 14 சிக்ஸர்களும் இங்கிலாந்தினால் 20 சிக்ஸர்களுமாக மொத்தம் 34 சிக்ஸர்கள் விளாசப்பட்டமை குறிப்பிடத்தக்கது. போட்டியின் சிறப்பாட்டக்காரராக ஜொனி பெயர்ஸ்டோ தெரிவானார்.

இந்தியாவும் இங்கிலாந்தும் தலா ஒரு வெற்றியைப் பெற்றிருக்கும் நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான மூன்றாவதும் இறுதியுமான போட்டி நாளை நடைபெறவுள்ளது.

# சர்ச்சைக்குரிய பெனால்டி மூலம் ஸ்பெய்ன் - கிரீஸ் போட்டி சமநிலை

கிரீஸ் அணிக்கு எதிரான உலக கோப்பை கால்பந்து தகுதிச் சுற்று ஆட்டத்தை ஸ்பெயின் அணி 1 - 1 என்ற கோல் கணக்கில் சமன் செய்தது.

உலகமெங்கும் நடைபெற்று வரும் 2022 ஆம் ஆண்டு உலகக் கோப்பைக்கான தகுதிச் சுற்றில் நேற்று ஸ்பெயின் அணியும் கிரீஸ் அணியும் மோதின.

2010 ஆம் ஆண்டு உலக கோப்பையை வென்ற ஸ்பெயின் அணி கடந்த சில ஆண்டுகளாக பெரிய அளவில் சோபித்திருக்கவில்லை. 2008 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற யூரோ கோப்பையை வென்ற ஸ்பெயின் அணி இம்முறை தனது ஆற்றலை நிரூபிக்கும் கட்டாயத்தில் உள்ளது. இந் நிலையில் இரு அணிகளும் பங்கேற்ற போட்டி ஸ்பெய்னில் நடைபெற்றது.


சிறப்பான முறையில் ஆட்டத்தைத் துவங்கிய ஸ்பெயின் அணியினர் கோல் அடிக்க கிடைத்த சில வாய்ப்புகளை நழுவவிட்டனர். போட்டியின் 34 ஆவது நிமிடத்தில் அபாரமான முறையில் கோல் அடித்தார் ஸ்பெயின் அணியின் முன்கள வீரர் மொராட்டா.

இரு அணிகளும் ஆட்டத்தில் நிதானம் காட்டியதன் காரணமாக ஸ்பெயின் அணி 1 - 0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்ற நிலையிலேயே முதல் பாதி நிறைவடைந்தது.

இரண்டாம் பாதியின்போது 57 ஆவது நிமிடத்தில் ஸ்பெயின் அணியின் தடுப்பாட்டக்காரரான மார்டினஸ் பந்தை தூர அடிக்க முயல, கிரீஸ் அணியின் வீரரான செகா மீது அவரது கால் பட்டதால் கிரீஸ் அணிக்கு பெனால்டி வாய்ப்பு வழங்கப்பட்டது. இதில் மார்டினஸ் வேண்டுமென்று தவறு செய்யவில்லை என்பது தெளிவாகத் தெரிந்ததால் களத்தில் சிறிது நேரம் குழப்பநிலை ஏற்பட்டது. ஆனால் கிரீஸ் அணிக்கு வழங்கப்பட்ட பெனால்டி திரும்பப் பெறப்படவில்லை.

பெனால்டி வாய்ப்பை பகாசெட்டஸ் கோலாக மாற்றினார். ஆட்டத்தை சமன் செய்த கிரீஸ் அணி அதன் பின்னர் தடுப்பாட்டத்தில் கவனம் செலுத்தியது. இறுதியில் இரு அணிகளும் தலா ஒரு கோல் அடித்த நிலையில் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

தனது இரண்டாவது தகுதிகாண் போட்டியில் ஜோர்ஜியாவை எதிர்கொள்ளவிருக்கிறது ஸ்பெய்ன் அணி.






# சச்சினுக்கு கொரோனா டுவிட்டரில் அவரே உறுதி

பிரபல இந்திய கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கருக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது.

லேசான அறிகுறிகளையடுத்து மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் தனக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டதாக டுவிட்டர் பதிவில் சச்சின் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து மருத்துவர்களின் அறிவுரையின்படி வீட்டில் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தனது குடும்ப உறுப்பினர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில் அவர்களில் யாருக்கும் தொற்று இல்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் பதிவிட்டுள்ளார்.

மருத்துவர்கள் கூறிய அனைத்து வழிமுறைகளையும் பின்பற்றி வருவதாகவும் தனக்கு உதவும் மருத்துவப் பணியாளர்களுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் சச்சின் கூறியுள்ளார்.

ராய்ப்பூரில் அண்மையில் நடைபெற்ற வீதிப் பாதுகாப்பு உலக கிரிக்கெட் தொடரில் சச்சின் தலைமையிலான இந்திய லெஜன்ட்ஸ் அணி, இறுதிப் போட்டியில் இலங்கையை வீழ்த்தி கோப்பையை வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தென்னாபிரிக்காவைச் சென்றடைந்தது பாகிஸ்தான் கிரிக்கெட் அணி

தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் பாகிஸ்தான் கிரிக்கெட் அணி அங்கு ஏப்ரல் 2 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள 3 ஒருநாள், 4 இருபதுக்கு இருபது போட்டிகள் கொண்ட தொடர்களில் விளையாட உள்ளது. அதற்காக பாபர் அஸாம் தலைமையில் 21 வீரர்களைக் கொண்ட அணியும் 13 பேரை உள்ளடக்கிய பயிற்சி மற்றும் நிர்வாக அலுவலர்களும் அங்கு சென்றுள்ளனர்.

பயணத்துக்கு முன்னர் இந்தக் குழுவினருக்கு கொரோனா பரிசோதனை செய்யப்பட்டது. அதன் முடிவுகளில் 35பேருக்கும் தொற்று இல்லை என்பது உறுதியாகிய நிலையில் திட்டமிட்டபடி அவர்கள் நேற்று தென்னாபிரிக்க தலைநகர் ஜோஹனஸ்பேர்க்கை சென்றடைந்தனர்.

சில தினங்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் அணி வீரர் ஹஸன் அலிக்கு தொற்று இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆயினும், அதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட 3 கட்ட சோதனைகளிலும் அவர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகவில்லை என உறுதிப்படுத்தப்பட்டது.

தென்னாபிரிக்காவுக்கு சென்றுள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் குழுவினருக்கு அங்கும் கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு மூன்று நாள் கட்டாய தனிமைப்படுத்தலுக்கும் அவர்கள் உள்ளாக்கப்படுவார்கள். கொரோனாத் தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்ட வீரர்கள் குறித்த தனிமைப்படுத்தல் காலத்திலும் பயிற்சியில் ஈடுபட அனுமதிக்கப்படுவர்.

தென்னாபிரிக்கப் பயணத்தை நிறைவுசெய்து கொண்டு சிம்பாப்வே செல்லவிருக்கும் பாகிஸ்தான் கிரிக்கெட் அணி, அங்கே 3 இருபதுக்கு இருபது மற்றும் இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடர்களில் விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனிவா பிரேரணையை நிராகரிக்கின்றோம் உள்ளகப் பொறிமுறை ஊடாக விசாரணை!

## தினேஷ் குணவர்த்தன திட்டவட்டம்



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்டுள்ள புதிய தீர்மானம் இலங்கையின் இறைமைக்கும், சுயாதீனத்துக்கும் எதிரானதுடன், நாட்டில் ஸ்திரமற்ற அரசியல் நிலைமை ஒன்றை உருவாக்கி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்துக்கு நெருக்கடியைக் கொடுக்கும் நோக்கத்திலேயே பிரேரணை கொண்டுவரப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன சபையில் தெரிவித்தார்.

மனித உரிமைகள் பேரவையில் பிரேரணையை முழுமையாக நிராகரிப்பதுடன் உள்ளகப் பொறிமுறையின் ஊடாக விசாரணைகளை மேற்கொள்வோமெனவும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை, நடைபெற்று முடிந்துள்ள ஜெனிவா கூட்டத்தொடரின் இலங்கை தொடர்பிலான பிரேரணை தொடர்பாக வெளிவிவகார அமைச்சின் விசேட அறிவிப்பை அமைச்சர் தினேஷ் குணவர்தன சபையில் விடுத்தார்.

இதன்போது அவர் கூறுகையில் -

உலகின் மிகவும் மோசமான பயங்கரவாத அமைப்பைத் தோற்கடிக்க பல்வேறு அரசாங்கங்கள் முயற்சித்தாலும், மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் மூலமாக விடுதலைப்புலிகள் பயங்கரவாதத்தை முழுமையாகத் தோற்கடித்து இந்த நாட்டு மக்களின் உயிர்வாழும் உரிமையைப் பெற்றுக்கொடுத்தோம்.

மனித உரிமைகள் பற்றி இன்று பேசும் நபர்கள் அப்போதைய காலகட்டத்தில் மக்களின் உரிமைகள் பறிபோய், வாழ முடியாத பயங்கரமான சூழல் நிலவிய நிலையில் அதனை மறைத்து, விடுதலைப்புலிகளின் நிர்வாக முறையொன்றை உருவாக்கிக்கொள்ள முடியும் என்ற நோக்கத்தில் ஒற்றையாட்சி முறையை நிராகரித்து தனி ஈழ இராச்சியத்தை உருவாக்கிக்கொள்ளும் நோக்கத்தில் நேரடியாகவும், மறைமுகமாகவும் ஒத்துழைப்பு வழங்கிய நபர்கள் இன்றும் வேறு வழிகளில் முயற்சிகளை எடுத்து வருகின்றனர்.

மனித உரிமைகள் தொடர்பாகப் பேசும் நபர்கள் இந்த நாட்டில் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதை விரும்பவில்லை என்பதும் வெளிப்பட்டுள்ளது. அதன் வெளிப்பாடே 2012, 2013, 2014 ஆம் ஆண்டுகளில் இலங்கைக்கு எதிரான பிரேரணைகளை கொண்டுவர காரணமாக அமைந்தது. எனினும் எமது இராணுவத்தினர் மனிதாபிமான ரீதியில் செயற்பட்டனர்.

மூன்று லட்சம் பொதுமக்களைப் பிரபாகரனிடம் இருந்து காப்பற்றி அமைதியான சூழலில் அவர்களை வாழ வைத்தோம். எமது தாய்நாட்டைப் பாதுகாக்க இராணுவத்தின் மூலமான சேவையை எவரும் மறந்துவிடக்கூடாது. அதுமட்டுமல்ல கைதுசெய்யப்பட்ட மற்றும் சரணடைந்த விடுதலைப்புலி உறுப்பினர்களுக்குப் புனர்வாழ்வு வழங்கி 12 ஆயிரம் பேரை சமூகத்தில் மக்களுடன் வாழ அனுமதித்தோம். இன்று வடக்கு மக்களின் வாழ்க்கை சாதாரண நிலைக்கு வந்துள்ளது.

விடுதலைப் புலிகள் இந்த நாட்டில் மிகவும் மோசமான பயங்கரவாத அமைப்பாக மாற்றம் பெற்றது, அதன் பின்னர் எமது நாட்டின் ஜனாதிபதியைக் கொலை செய்தனர், இலங்கைக்கு அப்பால் சென்று இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியைக் கொலை செய்தனர்.

இந்த நாட்டில் ஜனநாயக ரீதியில் செயற்பட்ட அரசியல்வாதிகள் பலரைக் கொலை செய்தனர். எம்முடன் இருந்த ஈ.பி.ஆர்.எல்.எப் தலைவர்கள் சகலரையும் கொலை செய்தனர். இவ்வாறான அராஜக இயக்கத்தைத் தோற்கடிக்க முடிந்த காரணத்தால் தான் இன்று நாடாக பிளவுபடாது ஜனநாயகத்தை வென்றெடுத்து ஒன்றிணைந்து பயணிக்க முடியுமாக உள்ளது.

எனினும் வெவ்வேறு நாடுகளில் உள்ள சிறுசிறு அமைப்புகள் தமது அரசாங்கங்களுக்கு அழுத்தம் கொடுத்து இலங்கைக்கு எதிராகச் செயற்பட கூறுகின்றன. எனினும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை மற்றும் அமைப்புகளுடன் நீண்டகால உறவை இலங்கை கையாண்டு வருகின்றது.

எமது அரசாங்கத்துக்குக் கிடைத்த ஆணைக்கு அமைய நாம் 2015 இணை அனுசரணையுடன் கொண்டுவரப்பட்ட ஜெனிவா பிரேரணையில் இருந்து விலகிக்கொள்வதாக நாம் அறிவித்தோம். ஏனெனில் இந்த பிரேரணை நாட்டின் இறையாண்மை, நல்லிணக்கம், அரசியல் அமைப்புக்கு முரணானது.

பல்வேறு நாடுகளிடம் இருந்து எம்மைத் துருவப்படுத்தும் செயற்பாடாகும், அத்துடன் நாட்டில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் எனவும் இராணுவத்துக்கு எதிரான நகர்வை இது முன்னெடுக்கும் எனவும் நாம் கருத்தில் கொண்டு பிரேரணையை நிராகரிக்க நடவடிக்கை எடுத்தோம். எந்தவொரு வெளிநாட்டு நீதிப்பொறிமுறையும் எமது சுயாதீனநீதிசேவையில் தலையிட இடமளிக்க முடியாது. ஆனால் இணை அனுசரணை பிரேரணை இவை அனைத்தையும் செய்கின்றது.

அதுமட்டுமல்ல ஒரு சில நாடுகளின் தேவைக்காக மாத்திரமே இந்தப் பிரேரணை கொண்டுவரப்பட்டுள்ளது, உள்நாட்டு விவகாரங்கள் தொடர்பில் மனிதவுரிமைகள் பேரவையில் காரணிகளை முன்வைக்க முடியாது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அரசை சிக்கலுக்கு உள்ளாக்கும் நோக்கிலும் நாட்டில் ஸ்திரமற்ற அரசியல் சூழ்நிலைகளை உருவாக்குவதும் தீர்மானத்தின் நோக்கமாகும்.

புவியியல் ரீதியாகத் தமது அரசியல் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான சில நாடுகள் பலவீனமான நாடுகளை மனிதவுரிமை விவகாரங்களின் ஊடாக நசுக்குவதற்கு முற்படுவதே மனிதவுரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள். இலங்கைக்குச் சார்பாக வாக்களித்த நாடுகளுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். இலங்கையின் உண்மையான நட்பு நாடுகள் தீர்மானத்தின் வாக்கெடுப்பில் பங்கேற்காமலும் இருந்தன.

யுத்த காலகட்டத்தில் ஏதேனும் தவறுகள் ஏற்பட்டிருப்பின் பாதிக்கப்பட்டவர்கள் சகலரும் முறைப்பாடுகளைச் செய்து விசாரணைகளை முன்னெடுத்து தீர்வுவழங்கும் ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதையும் நாம் பேரவையில் தெரிவித்தோம். விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தில் எவரும் பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்றால் அவர்கள் அது குறித்து ஆராயப்படும், அதேபோல் எவரேனும் காணாமல் போயிருந்தால் அவர்கள் பிரித்தானியாவில் பிரஜாவுரிமையை பெற்றுக்கொள்ளவில்லை என்றால் அவர்கள் குறித்து ஆராய முடியும். ஏனென்றால் பிரித்தானியாவில் பிரஜாவுரிமை பெற்ற நபர்களின் பட்டியலை இன்னமும் பிரித்தானியா எமக்கு வழங்கவில்லை. எனவே குற்றச்சாட்டுக்கள் இருப்பின் ஆதாரங்களுடன் எமக்கு முன்வைத்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாகாணசபைத் தேர்தலை நடத்தவில்லை, அதேபோல் இலங்கை கொவிட் - 19 நிலைமைகளை கையாள தெரியாத நாடாகவும் மனித உரிமைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார். ஆனால் உலகில் கொவிட் - 19 நிலைமைகளை சரியாக கையாண்ட நாடுகளில் நாம் உயரிய இடத்தில் உள்ளோம். மாகாணசபை தேர்தலை நடத்தாது இருக்கவும் இதுவே காரணமாகும். இலங்கையின் நிலைமைகளை முறையாகத் தெரிந்துகொள்ளாது, தரவுகளை சேகரிக்காது அர்த்தமற்ற அறிக்கைகளை ஆணையாளர் வெளியிட்டு வருகின்றார்.

எவ்வாறு இருப்பினும் இம்முறை வாக்கெடுப்பில் 47 நாடுகள் பங்குபற்றிய நிலையில் 22 நாடுகள் பிரேரணைக்கு ஆதரவாகவும், 11 நாடுகள் எதிராகவும் வாக்களித்தன. 14 நாடுகள் நடுநிலையாக செயற்பட்டன. எனவே, ஒட்டுமொத்தமாக இந்தப் பிரேரணைக்கு பெரும்பான்மை ஆதரவு இல்லை. எவ்வாறு இருப்பினும் இந்தப் பிரேரணையை முழுமையாக நிராகரிப்பதாக அரசாங்கம் தீர்மானம் எடுத்துள்ளது.

ஏனெனில் இது பக்கசார்பானதும் இந்த பிரேரணைக்கு பின்னால் அரசியல் நகர்வுகள் உள்ளதாகவும் கருதுகின்றோம். அத்துடன் ஒருதலைப்பட்சமான தீர்மானமாக கொண்டுவரப்பட்டதும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கட்டளைகளை மீறிய வகையிலும், பொய்யான ஆதாரங்களைக் கொண்டும் உருவாக்கப்பட்ட இந்த பிரேரணையை முழுமையாக நாம் நிராகரிக்கின்றோம். எனவே எமது இறையாண்மை, பாதுகாப்பை உறுதிப்படுத்த எமக்குள்ள ஒரே வழிமுறை இந்தப் பிரேரணையை நிராகரிப்பது மட்டுமேயாகும்.

இந்த அறிக்கையை இரண்டாகப் பிரித்துப் பார்க்க முடியும். ஒன்று விடுதலைப்புலிகளுடன் இடம்பெற்ற மோதலில் அவர்கள் தோற்கடிக்கப்பட்ட காலகட்டத்தில் ஏற்பட்டதாகக் கூறப்படும் இன அழிவுகள் தொடர்பான விசாரணை நடவடிக்கைகள், இரண்டாவதாக இலங்கையில் மிகப்பெரிய வெற்றியை பெற்றுக்கொண்டு முன்னைய அரசாங்கத்தை தோற்கடித்து இலங்கையின் ஜனாதிபதியாகத் தெரிவாகி எமது நாட்டின் பாதுகாப்பு மற்றும் இறையாண்மையைப் பாதுகாத்துள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சி முறைமை தொடர்பான விமர்சனங்களாகும். இந்த விடயங்கள் நாட்டின் உள்ளக செயற்பாடுகளில் மனித உரிமைகள் பேரவைக்குக் காரணிகளைக் கூறவும் அல்லது அறிக்கையிடும் முறைமை இதுவல்ல. ஒரு சிலர் இங்கிருந்து கூறிய காரணிகள் அறிக்கையில் பார்க்க முடிகின்றது. ஆகவே இது நாட்டையும் ஜனாதிபதியையும் பலவீனப்படுத்த எவ்வாறு இணைந்து செயற்பட்டுள்ளனர் என்பதை அவதானிக்க முடிகின்றது.

அதேபோல் அதிகளவிலான பணத்தைச்செலவழித்து இந்த பிரேரணையை நிறைவேற்றிக்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளனர். இந்தப் பணத்தை யுத்தத்தில் பாதிக்கப்பட்ட வடக்கு மக்களுக்குக் கொடுத்து, அவர்களுக்கான வீடுகளை அமைத்துக்கொடுக்க நடவடிக்கை எடுத்திருந்தால் ஆரோக்கியமானதாக இருந்திருக்கும். எனவே, தவறான தரவுகளும், பொய்யான சாட்சியங்களையும் கொண்டு தயாரிக்கப்பட்ட ஒரு சில நாடுகளின் தேவைக்காக கையாளப்படும் இந்தப் பிரேரணையை நாம் முழுமையாக நிராகரிக்கின்றோம்.

இன்று உலகில் நூறுக்கும் அதிகமான நாடுகள் கொவிட் - 19 வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த ஒரு தடுப்பூசியைக் கூடப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் உள்ளன. இந்த காலகட்டத்தில் மனிதாபிமானமாக செயற்படும் அவசியம் உள்ள நிலையில் ஒரு நாட்டின் இறையாண்மையை பலவீனப்படுத்தும் வேலைகளை மனித உரிமைகள் பேரவை முன்னெடுத்து வருகின்றது.

அதேபோல் எமக்கு ஆதரவாக வாக்களித்த எம்மை ஆதரித்த எமது உண்மையான நட்பு நாடுகள் அனைவருக்கும் நாம் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். மேலும் இலங்கை உள்ளக பொறிமுறையைக் கையாண்டு நாட்டின் நல்லிணக்கத்தையும் அமைதியையும் உருவாக்கி நாட்டை ஒன்றிணைக்கும் நடவடிக்கையை கையாள்வோம்.

நிலையான அபிவிருத்தி இலக்கை நோக்கிய எமது பயணத்தையும் நாம் முன்னெடுப்போம். 47 ஆம் கூட்டத்தொடரில் அறிக்கை தொடர்பிலான காரணிகளும், எழுத்து மூலமான அறிக்கை 59 ஆம் கூட்டத் தொடரிலும் முன்வைக்கப்படும். எனவே நீண்ட பயணம் ஒன்றை முன்னெடுக்க வேண்டியுள்ளது. - என்றார்.

யாழ்ப்பாணத்தின் பிரபல ஆசிரியர்களின்
ZOOM இன் ஊடான புலமைப் பரிசில் வகுப்புக்கள்
யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை , யாழ் புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம் மற்றும் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி ஆகிய பிரபல பாடசாலை ஆசிரியர்களின் ஒன்றிணைந்த கற்பித்தல்

| | |
|---|---|
| மாதாந்தம்<br>கட்டணம் 1000/= | 05 ஆசிரியர்களின் 45 மணி நேர வகுப்புக்கள் (தினமும் மாலை 7.00 – 8.30 வரை)<br>நேர்த்தியாக தயாரிக்கப்பட்ட முன்வைப்புக்களின் ஊடான கற்பித்தல்<br>ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் நிகழ்நிலைப் (Online) பரீட்சை |

குறித்த ஆசிரியர்களின் தரம் 3 , 4 மாணவர்களுக்கான வகுப்புக்களும் நடைபெறுகின்றது
உங்கள் பிள்ளைகள் பல ஆசிரியர்களிடம் ஒரே இடத்தில் ஒரே கட்டணத்தில் கற்பதால் ஏற்படும் நன்மைகளை எண்ணிப்பாருங்கள்
தொடர்புகளுக்கு 076 432 5688

வீடு வாடகைக்கு உண்டு
நல்லூர் கோவிலுக்கு அண்மையில் புதியவீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 0777977924

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# தமிழர்களுக்கு எதிரான இன அழிப்பு விசாரணையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தவும்!

## சிறிதரன் எம்.பி. வலியுறுத்தல்



உலகம் வெட்கித்தலைகுனியக்கூடிய அளவுக்கு இலங்கையில் ஒரு பாரிய இன அழிப்பு நடைபெற்றது, இந்த உண்மைகளைத் தேசிய ரீதியில் கண்டறிய முடியாது. எனவே, இந்த விடயத்தில் சர்வதேசம் தீவிரமாக ஈடுபட்டு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு இலங்கை விடயங்களைக் கொண்டு செல்லப்பட வேண்டும் எனத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட எம்.பியான எஸ்.சிறிதரன் தெரிவித்தார்.

ஜெனிவா பிரேரணை தொடர்பில் இந்தியா நடுநிலைமை வகித்திருந்தாலும் இந்தியா இம்முறை கனதியான செய்தியை இலங்கைக்கு சொல்லியுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பான மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

இலங்கையில் வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்கள் மீது புரியப்பட்ட இனப்படுகொலைகளுக்கான ,அவர்கள் மீது புரியப்பட்ட போர்க் குற்றங்களுக்கு எதிராக, அவர்களுக்கு நீதிக்கு புறம்பாக நடைபெற்ற கொலைகளுக்கு எதிராக ,சொத்தழிவுகளுக்கு எதிராக ஒரு நீதி வேண்டும் என்ற அடிப்படையில்தான் கடந்த 12 ஆண்டுகளாக ஜெனிவாவில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இந்தத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக்கொண்டு வருகின்றன. இந்தத் தீர்மானங்கள் நிறைவேற்றப்படுவதற்கு இலங்கையில் கடந்த காலங்களில் ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷவுடைய காலத்தில் நல்லிணக்க ஆணைக்குழு ஊடாக சில தீர்வுகளைத் தருவதாக ஒரு குழு நியமிக்கப்பட்டது. பரணகம தலைமையில் ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. இந்த இரு ஆணைக்குழுக்களுமே அரசால் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு செயலிழந்த நிலையில் கிடப்பில் போடப்பட்டன.

நல்லிணக்க ஆணைக்குழுவில் சொல்லப்பட்ட எந்த விடயங்களும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. நாங்கள் அதனை ஏற்றுக்கொள்ளவுமில்லை. பரணகம ஆணைக்குழுவும் தன்னுடைய அறிக்கையின் ஊடாக நாட்டில் எதனையாவது நடைமுறைப்படுத்தியதாக வரலாறு இல்லை.

அதனால் தான் உள்நாட்டிலே மேற்கொள்ளப்படாத இந்த விடயங்களை வெளிநாடுகள் தங்கள் கைகளில் எடுக்க வேண்டிய விடயம் மேலோங்கியுள்ளது. குறிப்பாக மியன்மாரில், சிரியாவில் மக்கள் எப்படிக் கொல்லப்பட்டார்கள் ,இங்கேயும் கூட 2008, 2009 ஆம் ஆண்டுகளில் வடக்கு, கிழக்கில் இருந்த பன்னாட்டு தொண்டு நிறுவனங்கள் ஐ.நா.மனித உரிமைகள் ஆணையத்துடன் தொடர்புடைய உதவி நிறுவனங்களை வடக்கு, கிழக்கிலிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றிய பின்னர், அங்குள்ள மக்கள் அந்த அமைப்புக்களை வெளியேற வேண்டாமென கதறியழுத போதும் எங்களைக் காப்பாற்றுங்கள் என மன்றாடியபோதும் அந்த நிறுவனங்களை அகற்றிவிட்டு மக்கள் மீது பொஸ்பரஸ் குண்டுகளும் கொத்தணிக்குண்டுகளும் வீசப்பட்டு பல்லாயிரக்கணக்கான மக்கள் வடக்கில் கொல்லப்பட்டார்கள்.

குறிப்பாக முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட மக்களின் தொகையும் காணாமல் போனவர்களின் தொகையும் ஒரு லட்சத்து 46 ஆயிரத்துக்கும் மேல் என ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு முன்பாக மன்னார் பேராயர் இராயப்பு ஜோசப் தன்னுடைய சாட்சியமாக முன்வைத்திருந்தார்.

இவ்வாறெல்லாம் தொடர்ச்சியாக வந்த இந்தப் பிரேரணைகள் பிரகாரம்தான் கடந்த 23 ஆம் திகதி கூட இலங்கைக்கு எதிராக 22 நாடுகள் வாக்களித்து அந்தப் பிரேரணையை நிறைவேற்றியுள்ளன. 11 நாடுகள் இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்துள்ளன. இந்தியா நடு நிலைமை வகித்திருந்தாலும் இந்தியா இம்முறை கனதியான செய்தியை சொல்லியுள்ளது.

இலங்கையில் ஓர் இனப்பிரச்சினை இருக்கின்றது. இந்தப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். இலங்கையினுடைய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான தமிழ் மக்களுடைய சுயாதிபத்தியத்தையும் சுயாட்சியையும் வலியுறுத்தக்கூடிய வகையில் ஒரு தீர்வை முன்வையுங்கள் என இந்தியாவின் பிரதி நிதி மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பேசியுள்ளார். இது காலத்தினுடைய கனதியான செய்தியாக நாம் பார்க்கின்றோம்.

அன்னை இந்திரா இந்தியப் பிரதமராக இருந்த காலப்பகுதியில் இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலைகளை மனிதக்குற்றங்களை வெளியுலகுக்குக் கொண்டு வந்ததும் இலங்கையில் ஓர் இனப்பிரச்சினை இருக்கின்றது என்பதை வெளியுலகுக்கு கொண்டு வந்ததும் அவருடைய காலம். இப்போது மீண்டும் இந்தியப் பிரதமர் மோடி தலைமையில் இந்திய அரசு இதனை மீண்டும் சர்வதேச தளத்தில் வெளியில் கொண்டுவந்துள்ளமை மிக முக்கியமானது.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் இதனை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்கின்றார். நீங்கள் ஏற்றுக்கொள்ளவில்லையென்றால் எதற்காக நீங்கள் இதற்கு அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும்? பிரேரணை தோற்றுவிட்டது என்கின்றீர்கள். முன்னுக்குப்பின் முரணான கருத்துக்களை முன் வைக்கின்றீர்கள்.

ஆதரவாக 22, எதிராக 11, நடுநிலையில் 14 ஆகவே 25 நாடுகள் இந்தப் பிரேரணையை எதிர்த்துள்ளன என இலங்கை ஒரு புள்ளிவிவரம் சொல்கின்றது. நீங்கள் ஏற்றுக்கொள்ளவில்லையானால் ஏன் பயப்படுகின்றீர்கள்? இலங்கையில் இராணுவமும் அரசும் தமிழ் மக்கள் மீது கொலைகளைச் செய்யவில்லை, குற்றங்களைப் புரியவில்லை, தமிழ் மக்கள் மீது அநீதிகளைச் செய்யவில்லை என்றால் ஏன் நீங்கள் பயப்பட வேண்டும்? விசாரணைக்கு முகம் கொடுக்கலாம்தானே? உங்கள் மடியில் கனதி இருப்பதனால்தான் இதற்கு எதிராக நீங்கள் குரல் கொடுக்கின்றீர்கள். நீங்கள் யுத்தக்குற்றம் செய்யவில்லை என்றால் ஒரு பகிரங்க விசாரணைக்குத் தயாராகுங்கள்.

உலகம் வெட்கித்தலைகுனியக்கூடிய அளவுக்கு இலங்கையில் ஒரு பாரிய இன அழிப்பு நடைபெற்றது. எனவே இவ்விடயத்தில் சர்வதேசம் தீவிரமாக ஈடுபட வேண்டும் இவ்விடயம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லப்பட வேண்டும் . அங்கு இது விசாரிக்கப்பட வேண்டும். தமிழர்களின் அபிலாஷை அதுதான். ஏனெனில் இந்த நாட்டில் உங்களிடம் இருந்து நீதி கிடைக்கவில்லை. நீங்கள் நீதியாக நடத்தவும் தயார் இல்லை.

தற்போதைய ஜனாதிபதி பதவியேற்ற பின்னர் அவர் உரையாற்றிய பல இடங்களில் இந்த நாட்டில் ஒரு தமிழினம் இருப்பதாக ,அவர்களுக்கு ஒரு பிரச்சினை இருப்பதாக கூறியதுமில்லை. ஏற்றுக்கொண்டதுமில்லை. அவரின் கிராமமட்ட சந்திப்புக்கள் கூட இதுவரை வடக்கிலோ கிழக்கிலோ நடந்ததுமில்லை.

இந்த நாடு ஒரு இனவாத சகதிக்குள் மூழ்கிப்போயுள்ளது. அமைச்சர்கள் இனவாதத்தை கக்குகின்றார்கள். இந்த நாடு இனவாதத்தில் அழியப்போகின்றது. சர்வதேசத்தின் பிடிக்குள் இந்த நாட்டை கொண்டு செல்ல நீங்கள் தயாராகி விட்டீர்கள். எனவே சர்வதேச விசாரணை வேண்டும் என்பதும் எமக்கு தீர்வு கிடைக்க வேண்டும் என்பதையே நாம் வலியுறுத்துகின்றோம். – என்றார்.

# நிறுவனமொன்றில் திட்டமிட்டுக் கொள்ளை: முகாமையாளர் உள்ளிட்ட இருவர் சிக்கினர்!

கொழும்பு, மார்ச் 27

திட்டமிட்டு 23 லட்சம் ரூபா பணத்தைக் கொள்ளையிட்ட சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நிறுவனமொன்றின் முகாமையாளராகப் பணிபுரியும் குறித்த சந்தேக நபர்களில் ஒருவர் அந்நிறுவனத்துக்கு உரித்தான 23 லட்சம் ரூபா பணம் மற்றும் 84 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை என்பவற்றை வேறு நபர்கள் ஊடாகத் திட்டமிட்டுக் கொள்ளையிட்டுள்ளமையோடு, அது தொடர்பில் அவரே பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடளித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை அவரால் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கமைய முன்னெடுக்கப்பட்ட விசாரணைக்கமையக் குறித்த நபர் இவ்வாறு திட்டமிட்டு நிறுவன பணத்தைக் கொள்ளையிட்டுள்ளமை தெரியவந்துள்ளதாகப் பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

மீகாவத்தை பொலிஸ் நிலையத்தில் கடந்த வியாழக்கிழமை ஈயந்துட்டுவ பிரதேசத்திலுள்ள நிறுவனமொன்றின் 23 லட்சம் பணம் மற்றும் 84 ஆயிரம் ரூபா பெறுமதியுடைய காசோலை என்பவற்றை வங்கியில் வைப்புச் செய்வதற்காகக் கொண்டு சென்ற போது வங்கிக்கு அருகில் மோட்டர் சைக்கிளில் வந்த இருவர் கொள்ளையிட்டுச் சென்றனர் என அந்நிறுவனத்தின் முகாமையாளரால் முறைப்பாடளிக்கப்பட்டது.

இது தொடர்பில் மீகாவத்தை பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்கமைய இந்தச் சம்பவம் முறைப்பாடளித்த முகாமையாளரால் திட்டமிட்டு செய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

அவரிடமிருந்த பையில் 50 ஆயிரம் ரூபா பணம் மாத்திரமே காணப்பட்டுள்ளது. குறித்த நபர் வெவ்வேறு தேவைகளுக்காக அவர் தொழில்புரிந்த நிறுவனத்தின் பணத்தை செலவிட்டமையால் அவற்றை மீளச் செலுத்துவதற்காக இவ்வாறானதொரு கொள்ளையைத் திட்டமிட்டுள்ளமையும் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

சந்தேகநபரான குறித்த முகாமையாளர் அவரது மனைவியின் சகோதரனுக்கு பணத்தை வழங்கி , தான் வங்கிக்கு கொண்டு செல்லவிருந்த 23 லட்சம் ரூபாவைக் கொள்ளையடிப்பதற்கு இருவரை ஒழுங்குபடுத்துமாறு கூறியுள்ளார்.

அவரது இந்தத் திட்டத்துக்கமையவே பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது. சந்தேகநபர் தொழில் புரியும் நிறுவனத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொண்ட பணத்தை மீளச் செலுத்துவதற்காக இவ்வாறு திட்டமிட்டு போலியாக முறைப்பாடளித்துள்ளார்.

எனவே முறைப்பாடளித்த சந்தேகநபர் மற்றும் அவரது மனைவியின் சகோதரனும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஏனைய சந்தேகநபர்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனினும் ஏனைய சந்தேகநபர்கள் பயன்படுத்திய மோட் டார் சைக்கிள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு போலியாக முறைப்பாடளிப்பது தண்டனைக்குரிய குற்றமாகும். எனவே குறித்த முகாமையாளருக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். – என்றார்.

# அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ சதொச வழக்கிலிருந்து விடுதலை!

அரசியல் நடவடிக்கைகளுக்காக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசாங்கத்தின் காலத்தில் ச.தொ.ச. ஊழியர்களைத் தவறாகப் பயன்படுத்தியமை தொடர்பான வழக்கிலிருந்து அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட மூவர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த உத்தரவைக் கொழும்பு பிரதம நீதிவான் நேற்று வெள்ளிக்கிழமை பிறப்பித்தார்.

2010 – 2014 வரை வர்த்தக அமைச்சராக செயற்பட்ட போது ச.தொ.ச. நிறுவனத்தின் 153 ஊழியர்களை அவருடைய அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுத்தியதோடு , அதனால் அரசாங்கத்துக்கு 4 கோடி ரூபா நஷ்டத்தை ஏற்படுத்தினார் எனக் குறிப்பிட்டு நல்லாட்சி அரசாங்கத்தின் போது இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ச.தொ.சவின் முன்னாள் தலைவர் இராஜ்பிரியந்த பெர்னாண்டோ மற்றும் மொஹமட் சர்கர் ஆகியோருக்கெதிராக இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஆயுதப் பயிற்சிகளை வழங்கிய குற்றம்: மத்ரஸா பாடசாலை ஆசிரியர்கள் கைது!

புத்தளத்தில், பாடசாலை மாணவர்களுக்கு ஆயுதப் பயிற்சி வழங்கிய குற்றச்சாட்டில் இரண்டு மத்ரஸா பாடசாலை ஆசிரியர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என சட்டமா அதிபரின் இணைப்பு அதிகாரி நிஷார ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

சட்டமா அதிபரின் அறிவுறுத்தலுக்கு அமைய குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக நிஷார ஜயரட்ன கூறியுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.03.2021இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org